Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 24 ஆம் நாள் றம்ழான் பிறை 10 (6-2-63) புதன்கிழமை 356

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின் வீதி, : யாழ்ப்பாணம்

# பிணையில்விட கோரிய மனுக்கள் நிராகரிப்பு

## சதிவழக்கு நீதிமன்றம் தீர்ப்பு

## "உரிய காரணம் காட்டப்படவில்லை"

கொழும்பு, செவ்வாய்

**சதி சந்தேக நபர்களைப் பிணையில்விட வேண்டுமென்ற கோரிக்கையை சதிவழக்கு நீதிமன்றம் இன்று நிராகரித்துவிட்டது.**

**சதிசந்தேக நபர்களைப் பிணையில்விட வேண்டு மெனக் கோரிய விண்ணப்பங்கள் அவ்வாறு பிணையில் விடப்பட வேண்டுமென்பதற்கு உரிய காரணங்கள் காட்டப்படவில்லையென்று மூன்று நீதியரசர்களைக் கொண்ட மூன்ருவது சதிவழக்கு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் திரு. சன்சோனி இன்று காலை அறிவித்தார்.**

சட்ட ரீதியான இலங்கை அரசாங்கத்தை சட்ட ரீதியற்ற முறையில் கவிழ்க்க 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27-ந் திகதி சதிசெய்ததாக 24 பேர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு, மூன்ருவது சதி வழக்கு நீதிமன்றத்தின் முன் இப்பொழுது விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

பலத்த பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள இந்த 24 பிரதிவாதிகள் தங்களைப் பிணையில் செல்ல அனுமதியளிக்கவேண்டுமென்று கோரிவிண்ணப்பித்திருந்தனர். இவர்களைப் பிணையில் செல்ல அனுமதியளிக்க வேண்டுமென்று கோரி அவர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களும் வாதாடினர். பிணையில்விட அனுமதியளிக்கக் கோரும் விண்ணப்பத்தின் மீது இன்று தீர்ப்பளிப்பதாக சென்ற விசாரணை முடிவில் நீதிமன்றத் தலைமை நீதியரசர் அறிவித்திருந்தார்.

இதன்படி இன்று முற்பகல் நீதிமன்றம் மீண்டும் கூடியதும் பிணையில்விட அனுமதி கோரிய மனுவின் மீது நீதிமன்றத்தின் தீர்ப்பை நீதியரசர் சன்சோனி தெரிவித்தார்.

பிணையில்விட வேண்டுமென்ற கோரிக்கைக்கு உரிய காரணம் காட்டப்படவில்லையென்றும் எனவே அந்த விண்ணப்பங்களை நிராகரிப்பதாகவும் தலைமை நீதியரசர் திரு. சன்சோனி அறிவித்தார்.

இந்த முடிவை அறிவதற்காக பெருந்திரளான மக்கள் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்தனர்.

தங்களைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதுதானென்பதை நிரூபிப்பதற்ப் போதிய ஆதாரங்கள் காட்டப்படவில்லை என்று நீதியரசர் சன்சோனி தெவித்தார்.

### குற்றச் சாட்டுத் தன்மை

பிரதிவாதிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களின் தன்மையையும் அவற்றுக்குரிய தண்டனைகளையும் கவனிக்கும்பொழுது பிணையில் விடவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க முடியாமலிருப்பதாக நீதியரசர் தெரிவித்தார்.

வழக்கு விசாரணையில் சிறிது தாமதம் ஏற்பட்டது உண்மைதானென்ருலும் இனியும் அநாவசியமான தாமதம் இருக்க மாட்டாது என்றும் நீதியரசர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் எதிரிகளை காவலில் வைத்திருப்பதால் அவர்களின் உடல் நலத்திற்கு அபாயம் ஏதும் ஏற்படும் என்றதற்கு கோர்டில் வைத்திய சாட்சி எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று நீதியரசர் சன்சோனி தெரிவித்தார்.

### எதிரிதரப்பு மிஞ்சவில்லை

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட, வேண்டிய காவலில் வைக்கப்பட்டுள்ள எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றஞ்சாட்டுகளின் தன்மையையும், அட்டேர்ணி ஜெனரல் தெரிவித்தவற்றையும் விட எதிரிகள் சார்பில் தெரிவிக்கப்பட்ட காரணங்கள் மிஞ்சிவிடவில்லை என நீதிமன்றம் தெரிவித்தது.

### ஒப்புக்கொண்டது

எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எதிரிகளை தனியாக சிறையில் வைக்கப்பட்ட விதம் பற்றி கூறியதையிட்டு தாம் ஆச்சரியப்படுவதாக நீதிமன்றம் தெரிவித்தது. சிறையிலிருக்கும் குற்வாளிகளை நாகரிகமாகவும், மனிதத் தன்மையுடன் நடத்துவதற்கு வசதி செய்யும் சிறைச் சட்டத்தின் பிரகாரம் கொடூரமான கொலையாளிகளையே [illegible] தனியாக சிறையில் வைக்கவேண்டும் என்பதை நீதிமன்றம் ஒப்

(-8ம் பக்கம் பார்க்க)

## பஸ் ஊழியர்களை பழிவாங்க மாட்டோம்

### பாலிமெண்டில் மந்திரி அறிவிப்பு

வேலைநிறுத்தத்தி லிறங்கிய பஸ் தொழிலாளர் எவர்மீதும் பழிவாங்கும் நடவடிக்கை எடுப்பதில்லை என அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக தொழில் தேசியமய மந்திரி திரு. எம். டி. சப். சிறிவர்த்தன பார்லிமெண்டில் கூறினர்.

இதற்கு முன் விவாதத்தை ஆரம்பித்து வைத்த திரு. எட்மன் சமரக்கொடி, லங்கா மோட்டார் தொழிலாளர் சங்கமும் அகில இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கமும் இன்று வேலைக்குத் திரும்புவதாக அறிவித்தார்.

வேலைக்குத் திரும்பும்படி ஊழியர்களை பலவந்தப் படுத்த அரசாங்கம் விரும்பவில்லை என்றும், அமைதியை ஏற்படுத்தவும், அரசாங்க உடமைகளை பாதுகாக்கவுமே ராணுவமும், பொலிசும் பயன்படுத்தப்பட்டது என்றும் மந்திரி மேலும் கூறி[illegible]ர்.

வேலைநிறுத்தச் [illegible]ய்திகளை பற்றி பத்திரிகைக[illegible]திரித்து வெளியிட்டதால்தா[illegible] செய்திகள் தணிக்கை [illegible]ய்யப்பட்டன என்றும் அவர் கூறினர்.

திரு. கெனமன் பேசுகையில் வேலைக்குத் திரும்பும் தொழிலாளர்மீது வஞ்சம்தீர்க்கக் கூடாது என்றும், ஆனல் வேலைக்குத் திரும்பியவுடன் பிரச்னைக்குத் தீர்வு ஏற்பட்டுவிட்டது என அரசாங்கம் கருதக் கூடாது என்றும் எச்சரித்தார்.

வட்டார விஸ்தரிப்பு

## உதவி கமிஷனர் நேரில் விசாரணை

### 21 வட்டாரங்களுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபையின் வட்டார விஸதரிப்பு சம்பந்தமாக விசாரணை நடத்த ஆராய்ந்து செல்வதற்காக யாழ்ப்பாணம் வந்த உதவி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு. டபிள்யு. எஸ். குணரத்தினம் நேற்று மாநகரசபை அங்கத்தவர்கள் பலரும் மற்றும் சிலரும் தெரிவித்த கருத்துக்களைப் பதிவு செய்து கொண்டார்.

அந்தரங்கமாக நடைபெற்ற இவ்விசாரணைக்குப் பத்திரிகை நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. திருவாளர்கள்: ஏ. ஜி. ராஜசூரியர், டி. எஸ். து[illegible]ராஜா, பி. எம். ஜோ[illegible] எம். ஜேக்கப், பீட்டர் சோமசுந்தரம், ஜே. வி. டபிள்யு. அல்வினஸ், ஹாஜி வி. எம். எம். அபுசாலி, காதி எம்.எம். சுல்தான் ஆகியோரும் தமிழ்க் காங்கிரசின் சார்பில் திருவாளர்கள டி. சங்கரப்பிள்ளை, என். ராசநாயகம் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

சாட்சியமளித்தவர்கள் எல்லோரும் மாநகரசபை வட்டாரங்களை இருபத்தியொன்ருக விஸ்தரிப்பதற்கு ஆதரவு தெரிவித்ததாகத் தெரிகிறது.

ஹாஜி வி. எம். எம். அபுசாலியும் காதி எம். எம். சுல்தா

(5-ம்பககம் பார்கக)

## 'மந்திரிக்குதெரியாமல் நடந்திருக்கலாம்'

### வர்த்தமானி அறிவிப்பு பற்றி கோப்பாய் எம்.பி

யாழ்ப்பாணம், செவ்வாய்

"வர்த்தகக் கல்வி சிங்களத்தில் மாத்திரமே பயிற்றப்படுமென இம்மாதம் முதலாம் திகதி வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. 1962-ந் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் திகதி கோப்பாய் பயிற்சிக் கலாசாலையில் தமிழில் வர்த்தகக் கல்வி பயிற்றுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என எனக்கு எழுதிய கடிதத்தில் கல்வி மந்திரி எழுதியிருக்கிருர். அவருக்குத் தெரியாமலே வர்த்தமானியில் இவ்விதம் அறிவிக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன்."

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் சிங்களத்தில் மட்டும் வர்த்தகக் கல்வி போதிக்கப்படும் என்ற வர்த்தகமானி அறிவித்தல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கல்வி இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி முன்னர் பலமுறை தமிழிலே வர்த்தக கல்வியை போதிக்காமல் தடுப்பதற்கு ஆதாரமில்லாத காரணங்கள் பல தெரிவித்தார். இந்த சாட்டுகள் யாவும் நியாயமற்றவையென நான் காட்டிய பின்னரே 1962, செப்டம்பர் 25-ம் திகதி எனக்கு எழுதிய கடிதத்தில் கோப்பாயில் தமிழில் வர்த்தகக் கல்வி பயிற்ற நடவடிக்கை எடுப்பதாக மந்திரி தெரிவித்தார். ஆனல் இம்மாதம் முதலாம் திகதி வெளிவந்த வர்த்தமானியில் சிங்களத்தில் மட்டுமே வர்த்தகக் கல்வி போதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது கல்வி மந்திரிக்குத் தெரியாமலே செய்யப்பட்டதாக நான் நினைக்கிறேன் கல்வி இலாகாவின் நிரந்தரக் காரியதரிசி தமிழர் நன்மை பெறுவதை விரும்பவில்லை எனறே நான் எண்ணுகிறேன். இதுகுறித்து கல்வி மந்திரிக்கு கடிதம் எழுதவிருக்கிறேன்."

## புதிய தகவல் இல்லை

புதுடில்லி, பெப். 5

கொழும்பு நாடுகளிடமிருந்து எல்லைத்தகராறு பற்றி புதிய கடிதம் எதுவும் வரவில்லை என இந்திய வெளிவிவகார அதிகாரி ஒருவர் கூறினர்.

# செய்தித்திரட்டு

## புகைப்பதற்கு தடை

தெஹிவளை, செவ்வாய்

சபைக் கூட்டங்கள் நடைபெறும்பொழுது, அங்கத்தினர்களுக்கு இலவசமாக இனிமேல் சிகரெட்டுகள் வழங்குவதில்லையென்று தெஹிவளை-கல்கிசை மாநகரசபையின் நிதி, சட்ட கமிட்டி முடிவுசெய்துள்ளது. சபைக் கூட்டங்கள் நடைபெறும்பொழுது அங்கத்தவர்கள் புகைபிடிக்கக்கூடாதென்றும் கமிட்டி முடிவுசெய்துள்ளது.

ஃ ஃ ஃ

## கண்டியில்

ஹிண்டகல, செவ்வாய்

கண்டியில், சுதந்திர தின நிழ்கச்சிகள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சிகளின்போது, திரு. டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, கண்டி எம். பி. திரு. ஈ. எல். சேனநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஃ ஃ ஃ

## விபத்து!

தெஹிவளை, செவ்வாய்

பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மாத்தறை நோக்கி புறப்பட்டுச் சென்ற வான் ஒன்று, ரத்மலானையில் பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானது. சம்பவம் நடைபெற்ற சமயம், சைக்கிளில் சென்ற ஒரு இளைஞன் வானுடன் மோதி ஸ்தலத்திலேயே மாண்டான். 14 பிரயாணிகளும் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஃ ஃ ஃ

## நுளம்புத் தொல்லை

தெரணியகலை, செவ்வாய்

தெரணியகலை மாவட்டத்தில் நுளம்புகள் தொல்லை அதிகரித்துள்ளது. உடனடியாக இது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், தொற்று நோய் பரவ வாய்ப்பு ஏற்படுமென்று இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். இப்பகுதியில் ஒரு சுகாதார இன்ஸ்பெக்டர் மட்டுமே இருக்கிறார். இவருக்கு உதவியாளர்கள் எவரும் இல்லை.

ஃ ஃ ஃ

## சோதனை வெற்றி

பிலியந்தலை, செவ்வாய்

மொறட்டுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் சி. டயஸ், ஒரேவாரத்தில், 40 சோதனைகளை நடத்தினர். சட்டவிரோதமாக மதுபானம் தயாரிக்கப்பட்ட 4 இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஃ ஃ ஃ

## தற்கொலை

மக்கோனை, செவ்வாய்

பிட்டிகல என்ற இடத்தைச் சேர்ந்த கருணசேன (32) என்பவர், தமது மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக 'போர்மிக்' அமிலத்தை அருந்தி, பின்னர் ஆற்றில் குதித்து முடிவில் நாகொடை ஆஸ்பத்திரியில் மரணமானார். மரண விசாரணையில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

## 'எம். பி.க்களுக்கு ஞாயிறு பாடசாலை'

பிலியந்தலை, செவ்வாய்

பார்லிமெண்டுக்கு அருகில், ஞாயிறு பாடசாலையொன்றை அரசாங்கம் நிறுவி, எம். பி.க்களுக்கு போதிக்க ஒழுங்கு செய்யவேண்டும் என்று சிறிசங்கராஜா ஞாயிறு பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பேசுகையில் திரு. சோமவீர சந்திரசிறி கூறினர்.

ஃ ஃ ஃ

## பொருட்காட்சி

திருமலை, செவ்வாய்

குச்சவெளி அரசினர் வித்தியாலயத்தில் நடைபெற்ற செல்வா இளைஞர் விவசாய சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. அரசரத்தினம் பேசுகையில், தனது நிர்வாகத்தின் கீழ், மாபெரும் விவசாய பொருட்காட்சியொன்று அண்மையில் நடைபெறவிருக்கிறதென்று கூறினர். கூட்டத்தில் பலர் சொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

## கோரிக்கை

திருமலை, செவ்வாய்

தென்னமரவாடி கிராமத்திற்கும் திருக்கோணமலைக்குமிடையே உள்ள போக்குவரத்து பாதையை சீர்படுத்திக் கொடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் ஓர் தீர்மானம் தென்னமரவாடி கிராம முன்னேற்ற சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஃ ஃ ஃ

## உதவவேண்டும்

திருமலை, செவ்வாய்

அண்மையில் இப்பகுதியில் பெய்த கடும்மழை காரணமாக பாதிக்கப்பட்ட வீதிகளை திருத்துவதற்கா ரூ. 15,000 நிதி உதவி அளிக்கும்படி குச்சவெளி கிராமசபை உள்ளூராட்சி ஆணையாளரை கேட்டுள்ளது.


## வரி விளம்பரம்

### நன்றி

தெய்வேந்திரன்—சிதம்பரராணி

3-2-63-ல் மண்டைதீவில் நடைபெற்ற திருமணத்தின் பொழுது சமுகம் தந்தும் வாழ்த்துரைகள் வாசித்தும், மணமக்களை ஆசீர்வதித்தும் வைபவத்தைச் சிறப்பித்த பெரியார்களுக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தம்பதிகளின் சார்பில் எமது நன்றியைச் செலுத்துகின்றோம்.

மு. நவரத்தினராசாவும் (கிராமத் தலைவர்) பாரியாரும்

694 'கமலபதி' மண்டைதீவு.

### வாடகைக்கு லொறி தேவை

கண்டாவளை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க காரியாலயத்தில் இருந்து பரந்தன் நெற்களஞ்சியத்திற்கு காலபோக நெல்எடுத்துச் செல்வதற்கு லொறி வேண்டும். விவரங்களுக்கு ஷெ சங்க மனேஜருக்கு எழுதவும்.

வ. இளையதம்பி (காரியதரிசி)

கண்டாவளை ப. நோ. கூட்டுறவுச் சங்கம், கண்டாவளை,

5-2-63. 692

### தொய்வு: நீரிழிவு

ஊணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### வேலை தேவை

தமிழ், ஆங்கில, சிங்கள அறிவுள்ள வான் வியாபாரத்திலும் ஒலி பெருக்கி விளம்பரத்திலும் அனுபவமுடைய கார் லைசன்ஸ் உடைய ஒருவருக்கு டிரைவரோ வேறு வேலையோ தேவை.

அ. தம்பு, கைதடி நுணுவில், சாவகச்சேரி.

693


## சங்கத்தின் பெரும்பணிக்கு வித்தியாதரிசி பாராட்டு

மட்டக்களப்பு, செவ்வாய்

"தொழிற் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டால் அவை வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு தமக்குத் தொந்தரவுகளை ஏற்படுத்திவுடுமோவென அதிகாரிகள் அஞ்சுவது வழக்கம். ஆனல் மட்டக்களப்புத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஆக்க வேலை வித்தியாபகுதிக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்கதாக அமைந்துள்ளது. ஆசிரியர்கள் தமது ஓய்வுநேரங்களை நல்ல முறையில் பயன்படுத்தக்கூடியவகையில் ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழக புகுமுக வகுப்பை நடாத்த முன்வந்த இந்த ஆசிரியர் சங்கத்தை நான் பாராட்டுகிறேன்".

மட்டக்களப்பு தமிழாசிரியர் சங்கத்தினல் நடத்தப்பட்டு வந்த ஆசிரியர்களுக்கான பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பின் இரண்டாவது வருட வகுப்பு ஆரம்பவிழாவில், மாவட்ட பெரும்பாகவித்தியாதரிசி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர.

ஆசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் வைபவத்திற்குத் தலைமைதாங்கினர். திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை தமிழ் கலாச்சார முறைப்படி குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி திரு. நாகொடவிதான, வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. எஸ். ஆறுமுகவடிவேல், தென் பகுதி வித்தியாதரிசி திரு. பி. சின்னத்துரை ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

---

## ரஷ்ய மாவு துர்நாற்றம் வீசுகிறதாம்

குருநாகலை, செவ்வாய்

தற்பொழுது விநியோகிக்கப்பட்டுவரும் ரஷ்ய மாவுக்குப் பதிலாக அமெரிக்க மாவை விநியோகம் செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று குருநாகலை மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டது.

மாநகரசபை அங்கத்தவர் திரு. ஆர்தர் வீரசிங்கா இதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பித்திருந்தார்.

குருநாகலை சேமநல சங்கக் காரியதரிசியான திரு. ஆர்தர் வீரசிங்கா, இந்த ரஷ்ய மாவில் தயாரிக்கப்படும் பாண் ஒருவித துர்நாற்றம் வீசுவதாகவும் அமெரிக்க மாவைவிட ரஷ்ய மா அதிக விலையில் விற்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

---

## சேமிப்புவார விழா

மன்னர், செவ்வாய்

"வீண் செலவுகளிலும், ஆடம்பரங்களிலும், பெருந்தொகையான பணம் வீணுவதை தவிர்த்து, சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதற்கு, சேமிப்பது ஒன்றே சிறந்த வழியாகும்" என்பதை எடுத்துரைக்கும் முகமாக மன்னர் மாவட்டத்தில் சேமிப்பு வார விழா கடந்த சனிக்கிழமை மாலை மன்னர் முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நடந்தேறியது. இவ்விழாவில் பல போட்டிகளும் நடைபெற்றன.

---

## நிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை, செவ்வாய்

அண்மையில் நடைபெற்ற மெலிஞ்சிமுனை இருதயராசா சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு. அ. மடுத்தீனும், உபதலைவராக கிருபா-சைமனும், காரியதரிசி, தனதிகாரியாக முறையே திருவாளர்கள் சீமாம்பிள்ளை, பிரான்சிஸ் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## முனிசிபல்சபை வட்டார விஸ்தரிப்பில் கொழும்புத்துறை

நாவாந்துறை, பாஷையூர், கரையூர் ஆகிய பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் புதிய முனிசிபல் வட்டார அமைப்பு மேற்கொள்ளப்படவேண்டுமென இம்மாதம் முதல் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் முனிசிபல் சபையின் விசேஷ கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்புத்துறை ஒரு கரையூராக இருப்பதால் அதற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் புறம்பானதொரு வட்டாரம் வகுக்கப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானம் இதே கூட்டத்தில் ஓர் அங்கத்தவரால் கொண்டுவரப்பட்டபோது தற்போதைய மேயர் அதற்கு ஆட்சேபம் தெரிவித்ததாக அறியப்படுகிறது. அவ்வாறு யின் மேயரின் உத்தேசம் என்னவாயிருக்கும்? கொழும்புத்துறை வட்டாரத்துக்கு அங்குள்ள அதன் சமூகத்தினர் ஒருவர் அல்லாத வெளி நபர் ஒருவரே பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டுமென்பது அவருக்குச் சம்மதமா? அதன் பேரில்தான் தீர்மானத்தை அவர் ஆட்சேபித்தார் என்று தெரிகிறது. ஆனல் கொழும்புத்துறை வாசிகள இதற்கெல்லாம் தங்கள் கண்களை மூடிக்கொண்டிருக்கமாட்டார்களென்பதை மேயர் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இம்மாதம் முதல் வாரத்தில் மேல் உதவிக் கமிஷனரின் யாழ்ப்பாண வருகையின்போது கொழும்புத்துறை வாசிகள் அவரைச் சந்தித்து கீழ்க்காணும் விஷயங்களில் தங்களுககுள்ள உரிமைகளை மேயர் புறக்கணித்து வந்திருப்பதுபற்றிக் கூறவிருக்கிறார்கள்.

மின்சார வெளிச்ச வசதி அளிப்பதில் இவ்வட்டாரங்கள் தகுந்தபடி கவனிக்கப்படாதிருப்பது. திரு. அல்பிரட் துரையப்பா மேயராகவிருந்தநாளில் முனிசிபல்சபை வாங்கிய அதற்கான 'டிரான்ஸ் போமர்' சென்ற மூன்று ஆண்டுகளாக உபயோகப்படுத்தப்படாமல் கிடப்பது. இப்பகுதிகளில் சென்ற மூன்று ஆண்டுகளாக மின்சார வெளிச்சம் இரவு 9 மணிக்குப் பிற்பாடே கிடைத்து வந்தமை. வீட்டுத் தேவைக்கே போதிய அளவான மின்சாரம் கிடைக்காதிருப்பது. அதனல் அவர்கள் அடைந்துவரும் கஷ்ட நஷ்டமும் கரை ஊர்ப் பகுதிகளுக்கென முதலில் ஆரம்பிக்கப்பட்ட தண்ணீர் விநியோகத் திட்டம் அவற்றில் ஒரு பகுதியான கொழும்புத்துறை வட்டாரத்துக்குக் கிடைக்காமற்போனது.

இது கொழும்புத்துறை வாசிகளுக்கு இழைக்கப்பட்டு வரும் பெரும் அநீதி. இதுமாதிரிப் பல காரியங்களில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டுவருகிறார்கள. இக்குறைகள்பற்றி பல தடவை மேயருக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டபோதிலும் அற்தகுப் பதிலோ அல்லது வேறு எவ்வகை நிவர்த்தியோ நாம் கண்டதில்லை.

காலப்போக்கில் இங்குள்ளவர்கள் 'வரி கொடா இயக்கம்' ஒன்று ஆரம்பிப்பதுமே சாத்தியமாகலாம்.

டி. கந்தையா.

## தமிழ்நாட்டில் சந்தன தோட்டங்கள்

சென்னை, பெப். 4

தமிழ் நாட்டில் 11 இடங்களில் சந்தனத் தோட்டங்கள் பயிரிட உத்தேசிக்கப் பட்டிருப்பதாய் மந்திரி சர்க்கரை மன்ருடியார் கூறினர்.

இத்தோட்டங்கள் ஒவ்வொன்றும் 20 ஏக்கர்களைக் கொண்டதாக இருக்கும்.

---

## வருடாந்த விழா

மன்னர், செவ்வாய்

மன்னர் மாவட்டத்திலுள்ள காணிக்கை மாதா ஆலயத்தில், வருடாந்த விழா, ஆடம்பரமின்றி இம்முறை கொண்டாடப்பட்டது.


பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம் என்றே கேட்டு வாங்குங்கள்.

இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள், பிரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ். மினுவாங்கொட.

# எல்லைத்தகராறு-கொழும்பு மகாநாட்டு நாடுகள் புதிய முயற்சி

## ஒபோரிஅட்டாவின் கருத்துக்கு கெய்ரோ விளக்கம் கேட்கிறது

கெய்ரோ, பெப். 5

இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு அடுத்து என்ன விதமான நடவடிக்கை எடுக்கலாமென்பதுபற்றி கொழும்பில் கூடிய ஆறு ஆசிய-ஆபிரிக்க நடுநிலைமை நாடுகளுக்கிடையில் ஆலோசனை நடைபெற்று வருகிறது. எல்லைப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காணும்முகமாக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனை சம்பந்தமாக சீனவின் போக்குக்காரணமாகவே கொழும்பு நாடுகள் அடுத்த நடவடிக்கைபற்றி ஆலோசனை செய்கின்றன.

### அலிசாப்ரிக்கு சிறிமா கடிதம்

ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரிக்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஒரு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் இக்கடிதத்தில் இந்திய-சீன எல்லைப் பிரச்னையில் கொழும்பு நாடுகள் எடுத்த முயற்சிகளின் முன்னேற்றம்பற்றி விளக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. எல்லைப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியாவும் சீனவும் நேரடிப் பேச்சுவார்த்தைக்குச் சம்மதிப்பதில்உள்ள இடையூறுகள்பற்றியும் இக்கடிதத்தில் இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டிருப்பதுடன் இருநாடுகளும் நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு வேறு சில புதிய யோசனைகளையும் பிரதமர் சிறிமா தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது. எல்லைப்பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கு தொடர்ந்து முயற்சி செய்வதற்கு இப்புதிய யோசனைகளை பிரதமர் சிறிமா தெரிவித்துள்ளாராம்.

### கானவுக்கு கெய்ரோ கடிதம்

கான நீதிமந்திரி திரு. ஒபோரி அட்டா சமீபத்தில் சீனவுக்குச் சென்றிருந்தபோது தெரிவித்த கருத்துபற்றி கான அரசாங்கத்துக்கு ஐக்கியஅரபுக் குடியரசு விளக்கம் கேட்டு ஒருகடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. எல்லைப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக இருநாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, கொழும்பு மகாநாட்டு யோசனைகளை இருநாடுகளும் அப்படியே முழுஅளவில் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்று திரு. ஒபோரி அட்டாசமீபத்தில்சீனவில்கருத்துத்தெரிவித்திருந்ததாகச் செய்தி வெளியாகியிருந்தது. இதுசம்பந்தமாக ஐக்கிய அரபுக்குடியரசு கானவுக்கு எழுதியுள்ள ஒருகடிதத்தில் கான நீதிமந்திரி திரு. ஒபோரிஅட்டா சீனவில் தெரிவித்த கருத்து, புதுடில்லியில் இந்தியப்பிரதமர் நேருவிடம் இலங்கை, கான, ஐக்கியஅரபுக் குடியரசு ஆகிய நாடுகள் தெரிவித்த விளக்கங்களுக்கு மாறுனவையாக இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

### பேசினல் வேறுபாடு நீங்கும்

இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி பீக்கிங்கிலுள்ள இலங்கை தூதர் திரு. ஏ. ஆ. பெரேரா அளித்த விருந்துபசாரமொன்றில் சீன உதவிப்பிரதமர் திரு. போ-யீ-போ பேசுகையில் எல்லைப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்காக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளுக்கு சீன தனக்கென சொந்த வியாக்கியானம் கொண்டிருக்கிறதென்பதை வலியுறுத்தினர். கொழும்பு யோசனைகளுக்கு இருநாடுகளும் கொண்டுள்ள கருத்துவேறுபாடுகள் இருநாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தால் அதில் நீங்கிவிடும் என்று அவர் கூறுனர்.

### படைபலம்பற்றி திரு. சாஸ்திரி

அந்தமான் தீவுக்கு விஜயம் செய்துள்ள இந்திய உள்விவகாரமந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று ஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில் இப்பொழுது சண்டை நடைபெறவில்லையாயினும் நாட்டின் பாதுகாப்பு முயற்சிகளைத் தளரவிடக் கூடாது என்றூர். சீன இப்பொழுது அமைதியாக இருந்தாலும் அது மீண்டும் ஏதேனும் விஷமம் செய்யக்கூடுமென்றும் படைபலத்தைப் பெருக்குவதில் தீவிர கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

### பாசன மின்சார உபயோகம்

நாட்டின் பாசன மின்சார உபயோகம்பற்றி இரு தனித்தனி உயர் அதிகாரசபைகளிருக்க வேண்டுமென்றும் இவை இணைந்து செயறாற்ற வேண்டுமென்றும் மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறினர். ராஜ்யங்களுக்கிடையில் தண்ணீர்த் தகராறு ஏற்படுவதை அவர் கண்டித்தார்.

### மகாபலிபுரம்பற்றி சிகானுக்

இந்தியாவில் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருக்கும் கம்போடியப்பிரதமர் இளவரசர்நொரடம் சிகானுக் நேற்று மகாபலிபுரத்துக்குச் சென்று பார்த்தார், தமது வம்சத்தைச் சேர்ந்த வர்மன் அமைத்த இந்தக் கலைகளையும் பார்வையிடக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாக இளவரசர் கூறினர்.

### உத்தரபிரதேசத்தில் மொழித்தகராறு

உத்தரபிரதேசக் கவர்னர் திரு. விஸ்வநாததாஸ் நேற்று உத்தரபிரதேச சட்ட[illegible]யில் உரைநிகழ்த்தியபோது சோஷலிஸ்ட் கட்சியினர் குறுக்கிட்டுப் பேசினர். இ[illegible]பைகளின் கூட்டுக் கூட்டத்திலும் உரைநிகழ்த்த கவர்னர் எழுந்தபோது ஐக்கிய [illegible]ாஷலிஸ்ட் பிரிவின் தலைவர் திரு. உக்ராசேன் எழுந்து, "இந்திதான் நாட்டின் [illegible]சிய மொழி. இந்திதான் இச்சபையின் மொழியும்கூட. எனவே கவர்னர் தமது உரையை இந்தியில்தான் நிகழ்த்த வேண்டுமென்றும் ஆங்கிலத்தில் நிகழ்த்தக் கூடாதென்றும் வேண்டிக கொள்கிறோம்" என்று கூறினர். "இந்தியில் உரைநிகழ்த்துவதில் கஷ்டமிருந்தால் அவர் தமது ஆரம்ப உரையை அவரது தாய்மொழியில் (ஒரியா) நிகழ்த்தலாம். ஒரியாவிலிருந்து இந்திக்கு மொழிபெயர்க்க நாங்கள் ஒழுங்குகள் செய்துள்ளோம்" என்று அவர் கூறினர். மற்றொரு சோஷலிஸ்ட் எம். பி.யும் இவ்விதம் இந்தியில் அல்லது ஒரியாவில் கவர்னர் உரைநிகழ்த்த வேண்டுமென்று கேட்டார். கவர்னர் தாஸ் சிலவார்த்தைகளை இந்தியில் நிகழ்த்த ஆரம்பித்து பின்னர் தமது கஷ்டத்தை அங்கத்தவர்கள் உணருவார்களென நம்பிக்கை தெரிவித்துவிட்டு ஆங்கிலத்தில் நிகழ்த்தத் தொடங்கினர். இந்தியில் முடியாவிட்டால் ஒரியா மொழியில் உரைநிகழ்த்துமாறு அங்கத்தவர்கள் கூற வேகவர்னர் தமது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். இதன்பின் கவர்ன உரையின் இந்தி மொழிபெயர்ப்பை சட்டசபை சபாநாயகர் வாசித்தார்.

# கனடா பாதுகாப்பு மந்திரி ராஜினமா

சிட்னி, பெப். 5

கனடா பாதுகாப்பு மந்திரி திரு. ஹார்ப்பனஸ் தமது பதவியை ராஜினமாச் செய்துவிட்டார். அமெரிக்காவுக்கும் கனடாவுக்குமிடையில் அணுஆயுத உதவி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள சர்ச்சை காரணமாக திரு. ஹார்ப்பனஸ் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளதாகவும் அணுஆயுதம் சம்பந்தமாக தமது அரசாங்கத்தின் கருத்தைத் தாம் ஆதரிக்கவில்லையென்றும் இவ்விஷயமாக கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டுள்ள வேற்றுமைகளை அமெரிக்கா பகிரங்கபடுத்தியதைத் தாம் விரும்பவில்லையென்றும் திரு. ஹார்ப்பனஸ் கனடா பிரதமர் டீபன் பேக்கருக்கு எழுதிய ராஜினமாக் கடிதத்தில் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

திரு. ஹார்ப்பனஸ் 1957-ம் ஆண்டு முதல் கனடா அரசாங்கத்தில் மந்திரியாக இருந்து வந்துள்ளார். 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாதுகாப்பு மந்திரியாக நியமிக்கப்படுவதற்கு முன்னுல் அவர் விவசாய மந்திரியாக இருந்தார்.

கனடிய எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தின்மீது விரைவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டுவரவிருக்கிறது.

# பேச்சுவார்த்தைகளின் பலாபலன்தெரிந்தேநடவடிக்கை

## அமெரிக்க உதவிபற்றி டீன் ரஸ்க் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையிலிருந்து சமீபத்தில் கிடைத்த தகவலின்படி எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பலன் கொடுக்கக் கூடிய பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுவருவதாக அறியவந்துள்ளது. இதனுல் நாம் இலங்கை அரசாங்கத்துக்கு நிதி உதவியை அளித்துவருவதை நிறுத்தும் தீர்மானத்தை ஒத்திப்போட்டுள்ளோம்.

இவ்வாறு அமெரிக்க வெளிபுறவுமந்திரி திரு. டீன்ரஸ்க் அறிவித்துள்ளதாக அமெரிக்க தகவல்பகுதி வெளியிட்டுள்ளது.

திரு. டீன்ரஸ்க் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சர்வதேச சட்டத்தின்படி நஷ்டஈடு கோருவதையே நாம் விரும்புகின்றேம். இதனுல் இருதரப்பினருக்கும் ஏற்றதொரு முடிவை ஏற்படுத்துவதே எமது நோக்கம். இப்பொழுது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் இருதரப்பினருக்குமிடையில் ஒரு உடன்பாடு ஏற்பட்டதா இல்லையா என்பதைத் தெரியவைக்கும்.

திரு. டீன்ரஸ்க் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இதுபற்றித் தெரிவிக்கையில், அமெரிக்க உதவி எப்பொழுது நிறுத்தப்படும் என்று இப்பொழுதுகூறமுடியாது. ஆனுல் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் விளைவுகளுக்கேற்ப இது தீர்மானிக்கப்படும் என்றூர்.

இதற்கிடையே வர்த்தக போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, தாம் ஷெல், எஸ்ஸோ, கல்டெக்ஸ் ஆகிய மூன்று கம்பெனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனும் நாளை மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார். இதற்குமுன்னர் திரு. ஆழ்வாப்பிள்ளை இவர்களுடன் இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

### டில்லியில் ரஷ்ய மந்திரி

புதுடில்லி, பெப். 4

ஜப்பான் செல்லும் வழியில் சோவியத் வர்த்தக மந்திரி புதுடில்லி வந்து சேர்ந்தார். இந்திய சோவியத் உத்தேச வர்த்தக ஒப்பந்தம் பற்றி அவர் குறிப்பிட்டார். ஜப்பானில் வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச் சாத்திடும் பொருட்டு அவர் செல்கிறூர்.

### 3-ம் திட்டத்தில் 1 கோடிடன் உருக்கு

புதுடில்லி, பெப். 4

இந்தியாவின் 3-ம்திட்ட இறுதியில் 1கோடி டன் எஃகு உற்பத்தியாகும். என எதிர்பார்க்கப்படுவதாக இரும்பு மந்திரி திரு. சுப்ரமணியம் கூறினர். 4-ம் திட்டத்தில் 180 லட்சம் டன்னும், 1976-ல் 3 கோடி டன்னும் உற்பத்தியாகும் என அவர் அறிவித்தார். 1982-ல் 5 கோடி டன் உருக்கு உற்பத்தி குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்ட 4-ம் திட்டத்தில் உருக்குத் தொழிலில் பயிற்சி பெற்ற 40 ஆயிரம் பேர் தேவைப்படுவார்கள் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

### இந்தியாவில் வெளிநாட்டு மன்னர்கள்

புதுடில்லி, பெப். 4

கிரேக்க மன்னர் பாலும், ராணியும் இன்று பஞ்சாபிலுள்ள பாக்ராநங்கல் அணைக்கு விஜயம் செய்தனர். "பாக்ரா திட்டம் ஒரு மாபெரும் திட்டம்" என மன்னர் பின்பு கூறினுர்.

சென்னை வந்துள்ள கம்போடிய இளவரசர் நாரோடம் சிஹானுக், பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையைப் பார்வையிட்டார். இந்தியாவின் தொழில் வளர்ச்சியை அப்போது அவர்பாராட்டினர்

### "மாலை முரசு" ஆசிரியர்கள்

சென்னை, பெப். 4

"மாலை முரசு" பத்திரிகையில் வெளியான ஒரு செய்தியைத் தொடர்ந்து ஆசிரியர், செய்தி ஆசிரியர் ஆகியோர் மீது கிளப்பப்பட்ட உரிமைப் பிரச்னை விஷயமாக நடவடிக்கை எடுப்பதில்லை என தமிழ்நாட்டு கீழ்சபை முடிவு செய்தது. இவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் நடவடிக்கை எடுக்க வேண்டாமென உரிமைக் கமிட்டி சிபார்சு செய்தது.

[illegible] வாக்கு

ஆவறு செய்யும் மனிதனைக் காணும் போதெல்லாம், நானும் தவறு செய்திருக்கிறேனென்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். காமுகனைப் பார்க்கும் போதும்நானும் அவ்விதமே ஒரு சமயம் இருந்திருக்கிறேனென்று சொல்லிக் சொல்வேன். இதனால் உலகிலுள்ள எல்லாருடனும் நெருங்கிய உறவு உணர்ச்சி ஏற்படுவதுடன் நம்மிடை மிகக் கடையவரும் மகிழ்ச்சியடையாவிடில் நானும் மகிழ்ச்சியடைய முடியாதென்பதையும் உணர்கின்றேன்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
தை மீ 24உ (6-2-63)


## தமிழர் ஒற்றுமை

மொழி உள்ளிட்டு சில முக்கிய பிரச்னைகளையும் தேசிய அடிப்படையில் தீர்க்கவேண்டுமென்ற யோசனை பிறந்திருக்கும் இச்சமயத்தில் தமிழ்ப் பேசும்மக்கள் ஒரே குரலில் தங்கள் பொதுவான கோரிக்கைகளை ஒற்றுமையாகத் தெரிவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டிலும், சில தலைவர்கள் தமிழ்ப்பேசும் மக்களிடையே இச்சமயம் ஒற்றுமை இருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

தனிச்சிங்களச்சட்டம் நிறைவேறி இப்போது கடுமையாக அமுல் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்மொழி உபயோகச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அதுபற்றிய விதிகள் தயாரிக்கப்படாமல் அச்சட்டம் அமுல் நடத்தப்படாமல் விடப்பட்டுள்ளது. தமிழர் தாங்கள் அரசாங்கத்துக்கு எழுதும் கடிதங்களுடன் சிங்கள மொழி பெயர்ப்பையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதிலிருந்து, நிலைமை எவ்வளவு மோசமாகியுள்ளதென்பதை உணரலாம். இன்னும் இவ்விஷயமாக என்னென்ன மோசமான உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமோ தெரியவில்லை.

தமிழ்ப்பேசும் மக்களைப் பொறுத்தவரை இது அவர்கள் எல்லாருடைய சுயமரியாதையையும் பாதிப்பதாகும். தாங்கள் இந்நாட்டில் மற்றச் சமூகத்துடனே சரிசமமாக மானத்துடன் வாழ்வதா இல்லையா என்ற இவ்விஷயத்திலே தமிழ்ப் பேசும் மக்களிடையே எவ்வித கருத்துவேற்றுமையோ, கட்சி வேற்றுமையோ இருப்பதற்கில்லை. இவ்விஷயமாக தமிழ்ப்பேசும் மக்களிடையே இச் சமயம் பிளவுகளும் வேற்றுமைகளும் இருக்குமாயின் அது அவர்கள் நிலைமையை மேலும் பலவீனப்படுத்தி, அவர்கள் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே கெடுத்துக் கொண்டதாகவும் முடியக்கூடும்.

பார்லிமெண்டிலே தமிழ்ப் பேசும்மக்களின்பிரதிநிதிகளுள் தமிழரசுக் கட்சியினரே அதிகமுள்ளனர். அவர்களைத் தவிர, தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்தவரும், சுயேச்சையானவர்களும், நியமன அங்கத்தினருமுள்ளனர். வேறு விஷயங்களில் தங்களுக்கிடையே இதுவரை வேற்றுமைகள் என்ன இருப்பினும்சரி இந்த முக்கியமான சமயத்தில், அவர்களனைவரும் ஒன்று கூடி, மொழி முதலிய பொதுவான பிரச்னைகளைப்பற்றிவிவாதித்து ஏகோபித்த கோரிக்கையைத் தெரிவிக்க முன்வர வேண்டும்.

இதற்கான முயற்சியை, சமூகத்தின் மேலான நன்மையை முன்னிட்டு பழைய விருப்பு வெறுப்பு, கட்சி வேற்றுமை இவற்றையெல்லாம் மறந்து, பலதமிழ்த் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும். சமூக ஒற்றுமையில்தான், அதன் பலம் அடங்கியுள்ளதுடன், நியாயமான உரிமைகளையும் பெற முடியுமென்பதை விளக்கத் தேவையில்லை. இதுவரை இவ்விஷயமாகச் செய்த சில முயற்சிகள் பலிக்காமலிருந்திருக்கலாம். அதற்குக் காரணமென்னவாயினும் ஆபத்து அதிகரித்துள்ள இம் முக்கிய சமயத்தில் இதுபற்றி தீவிர முயற்சி எடுத்தால் அது வெற்றி பெறுமென்பதே நமது நம்பிக்கை. இவ்விஷயமாக மற்றவர்களைவிட தமிழரசுக்கட்சியினருக்கே அதிக பொறுப்புண்டு. பார்லிமெண்டுக்கு வெளியிலுள்ள முக்கிய தமிழ்ப் பேசும் தலைவர்களையும் அழைத்து, ஒற்றுமை மகாநாடு கூட்டி, ஒரே குரலில் தமிழ்ப் பேசும் மக்களின் கோரிக்கையைக் கேட்க எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும்.

## மந்திரம் பலிக்கவில்லை!

பதுளை, செவ்வாய்

மூன்று இளைஞர்கள் தமது நெற்பயிரை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாக்கும் நோக்கமாக நெல்விளைந்திருந்த இடத்துக்குச் சென்றுர்கள். ஆனல் அங்கு எதிர்பாராதபடி காட்டுயானை ஒன்று பயிரைச் சேதப்படுத்திக்கொண்டிருந்தது.

இதைப் பார்த்த மூவரும் மரத்தின்மீது ஏறி தமக்குத் தெரிந்த யானையை விரட்டும் மந்திரத்தை உச்சரித்தார்கள். ஆனல் யானை விலகிச் செல்வதற்குப் பதில் அவர்கள் ஏறியிருந்த மரத்துக்குச். சமீபத்தில் வந்துகொண்டிருந்தது. இதை அவதானித்து ஒருவர் அதிக அச்சத்தினல் நடுநடுங்கிக் கீழே விழுந்தார்.

அவர் விழுந்ததினல் ஏற்பட்ட சத்தத்தினல் யானை வெருண்டு ஓடியது.

ஆனல் விழுந்தவர் பிழைக்கவில்லை. அவர் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமடைந்தார்.

## கிரீஸ் மன்னர் ஆக்ரா விஜயம்

ஆக்ரா, பெப். 5

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள கிரீஸ் மன்னர் பாலோவும் ராணி பெடறிக்காவும் இன்று நங்கலிலிருந்து விசேஷ ரயில் மூலம் ஆக்ரா வந்து சேர்ந்தனர். ஆக்ரா வந்து சேர்ந்த மன்னர் தம்பதிகளுக்கு இங்குள்ள மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

# தோட்டப்பகுதி தொழிற் சங்கங்களையும் அழைத்துப் பேசுங்கள்

## பிரதம மந்திரிக்கு யூனியன் கடிதம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையிலுள்ள இந்திய மக்களின் பிரச்னைகளைக் கலந்தாலோசித்து ஒரு தீர்வுகாண்பதற்காக பிரதமமந்திரி கூட்ட எண்ணியிருக்கும் சர்வகட்சி மகாநாட்டில் தோட்டப்பகுதிகளிலிருக்கும் தொழிற் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கக் கேட்டுக்கொண்டு அகிலஇலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் யூனியன், பிரதம மந்திரி ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு ஒரு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

இந்நாட்டில் வசிக்கும் இந்திய தோட்டத் தொழிலாளர் நலன்களைப்பாதிக்கும் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வுகாண அவர் மனம் துணிந்தமைக்கு பாராட்டுத் தெரிவித்துக்கொண்டு இக்கடிதத்தில் யூனியன் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

இந்தியத் தொழிலாளர் பிரச்னையானது இந்நாட்டில் நீண்டகாலமாக இருந்துவரும் ஒன்றுகும். ஒன்றன்பின்னென்றுக பதவி ஏற்ற அரசாங்கம் எதனலும் தீர்த்துவைக்கமுடியாது விடப்பட்ட ஒரு பிரச்னை ஆதலால் அதில் நிரந்தரமான ஒரு நல்ல முடிவு இனி மேலாவது ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் இந்நாட்டில் வாழும் பத்து லட்சம் இந்திய தோட்டத் தொழிலாளரின் நல்லுறவையும் மனப்பூர்வமான ஊக்கத்தையும் இந்நாட்டின் முன்னேற்றத்துக்கும் செழிப்புக்கும் திருப்புதல் சாத்தியமாகும். ஆகவே, இவர்களைப் பொறுத்த பிரச்னைகளில் ஒரு தீர்வுகாணும் முயற்சியாக கூட்டப்படவிருக்கும் சர்வகட்சி மகாநாட்டில் அவர்களது தொழிற் சங்கங்களுக்குப் பிரதிநிதித்துவம்கொடுத்து அவர்களையும் கலந்தாலோசிப்பது அவசியமெனக் கருதுகிறேம். அல்லாதுபோனல் இவர்கள் தங்களைக் கலந்துகொள்ளாமல் தங்கள் அபிப்பிராயங்களுக்கு மதிப்புத்தராமல் செய்துகொள்ளப்பட்ட 'முடிவு' தங்கள்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டதெனப் பிற்பாடு குறைகூறுவதற்கு இடமாகிவிடும். தோட்டத் தொழிலாளரின் தொழிற் சங்கங்கள் சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்வதனல் இலங்கை இந்தியர் பிரச்னையில் நிலையானதொரு நிவர்த்தி மார்க்கம் தோன்றுவதற்கு அது ஓர் உதவுபடியாயிருக்குமே அன்றி அதனல் எதுவித பாதகமும் ஏற்படாது என்பது நமது நம்பிக்கை. ஆகவேதான், தாங்கள் கூட்ட உத்தேசித்திருக்கும் சர்வகட்சி மகாநாட்டில் தோட்டப்பகுதி தொழிற் சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளித்து அவர்களையும் மகாநாட்டுக்கு அழைத்துவைத்துப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேம்.

## 'எதிர்ப்பு குறைகிறது'

புதுடில்லி, பெப். 5

தங்கக் கட்டுப்பாடு சங்க கூட்டம் புதுடில்லியில் இன்று நடைபெ[illegible]து.

14 [illegible]ட் தங்கத்தில் நகைகள் [illegible] செய்யவேண்டுமென்று அரசாங்கம் அறிவித்ததற்கு முன்னர் இருந்த எதிர்ப்பு இப்பொழுது வெகுவாகக் குறைந்துள்ளதென்றும் 14 கரட் தங்கத்தில் நகைகள் செய்வதில் பலர் ஒத்துழைக்க முன்வந்திருக்கிருர்கள் என்றும் தங்கக் கட்டுப்பாடு சங்கத் தலைவர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

## தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க பயிற்சி

கொழும்பு, செவ்வாய்

தொழிலாளர்களுக்கு தொழிற்சங்க கோட்பாடுகள் பற்றியும் தொழிற் சட்டதிட்டங்கள் பற்றியும் தெரிவிக்குமுகமாக தொழில், தேசியமய சேவை அமைச்சு, தொழில் இலாகா சமர்ப்பித்துள்ள திட்டத்தை அங்கீகரித்துள்ளது.

அதிக தொழிலாளர்கள் கடமையாற்றும் வேலை ஸ்தலங்களில் தொழிலாளர்களுக்கு இது சம்பந்தப்பட்ட சொற்பொழிவுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொழில் இலாகா இந்த சொற்பொழிவுகளை நடத்த ஒழுங்குகளை மேற்கொள்ளும்,

உரை நிகழ்த்தும் உத்தியோகஸ்தர்கள் தொழிற்சங்கங்கள் எவ்விதம் இயங்குகின்றன என்பது பற்றியும் இது சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களையும் விளக்குவார்கள்.

இந்தத் திட்டம் வெற்றிபெற்றுல் வெளிநாட்டு உதவியுடன் தொழிலாளர்களுக்கென விசேஷ கட்டடமொன்றை நிறுவி அங்கு ஒரு நூல் நிலையத்தையும் நடத்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்திட்டம் வெற்றிபெற தொழிற்சங்கங்களினது ஒத்துழைப்பையும் கோர அமைச்சு முடிவுசெய்துள்ளது.

## புதுச்சேரியில் பிரெஞ்சு பல்கலைக் கழகம்

புதுச்சேரி, பெப். 4

பிரெஞ்சுமொழியையும், கலாச்சாரத்தையும் கற்க புதுச்சேரியில், பிரெஞ்சு பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவிருப்பதாக சலாச்சார மந்திரி டாக்டர் ஹுமாயூன் கபீர் கூறினர். இது ஆசிய நாடுகள் அனைத்துக்கும் பயன் படும் என்றும் அவர் கூறினர். ரூ. 23 லட்சம் செலவில் இது அமைக்கப்படும்.

## தபாலில் 1,200 தந்திகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் தந்திகள் யாவும் தபாலில் வருவதாகத் தெரியவருகிறது.

நேற்று மட்டும் யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்கு 1,200 தந்திகள், தபாலில் வந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிளேடுகளுக்குப் பதில் கால்நடை சாதனங்கள்

சென்னை, பெப். 5

க்ஷவர பிளேடுகளை ரஷ்யாவுக்கு அனுப்பி, பதிலுக்கு கால்நடை வைத்திய சாதனங்களை வாங்கிக்கொள்ளும் உடன்பாடு ஒன்றில் இந்தியாவும் சோவியத்தும் விரைவில் கையெழுத்துச் செய்யும்.

5,000 சோவியத் டிராக்டர்கள் இந்தியாவுக்கு வந்தும் சென்னையிலும், கேரளத்தில் எழுபது தான் உபயோகத்திலிருக்கிறது என்று ரஷ்ய வர்த்தக கமிஷனர் பேவ்னெவ் கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து, ஒரு 'ஈழநாடு' அபிமானி (கையெழுத்தின்றி) எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிடுவதாவது:-

"நீங்கள் ஐயாறன் என்று எழுதும் 'கொலம்' நல்லாக இல்லை. அந்த இடத்துக்கு மலர்க்கொத்து போன்றவை எழுதினல் நல்லாய் இருக்கும். நீங்கள் பொதுவாக உங்கள் விஷயத்தை எழுதுகிறீர்கள். அதனல் என்னல் ரசிக்க முடியாமல் இருக்கிறது. இதைப்பற்றி என் நண்பர்களையும் கேட்டேன். அவர்களும் அதே கருத்தைத்தான் தெரிவித்தார்கள். இந்த இடத்துக்கு ஒரு மாற்றம் செய்வதும் நல்லது என்பது என் கருத்து. பத்திரிகையில் இடைக்கிடை இப்படிப்பட்ட மாற்றங்கள் செய்தால் பத்திரிகையும் வளர்ச்சியடையும் என நம்புகிறேன்."

இக்கடிதம் எழுதியுள்ள அன்பருக்கு மிகவும் நன்றி. ஏன் தெரியுமா? 'ஈழநாடு' பத்திரிகையைக் தினசரி வாங்கிப் படிக்கும் அபிமானி அவர். அவர்கள்தான் எனது உண்மையான எஜமானர்கள். அவர்கள் பத்திரிகை வளர்ச்சிக்காகக் கூறும் கருத்துக்களை கவனமாகக் கேட்டு, கூடுமானவரை, அவற்றை நிறைவேற்ற வேண்டியதே எனது பெரும் கடமையுமாகும்.

இதுவரைபலர் 'ஐயாறனை'ப் பற்றி பலவிதமாகப் பாராட்டி, எழுதியும் நேரில் கூறியுமுள்ளனர். அவற்றை எல்லாம் இங்கு வெளியிட்டு தம் பட்டமடித்துக்கொள்ள என்மனம் விரும்புவதில்லை.

* * *

ஆனல் இவ்விஷயமாக என்னைப்பற்றியே மற்றொரு ரகசியத்தை எழுதவேண்டி இருப்பதற்காக கொழும்பு அன்பர் மன்னிக்கவேண்டும். தினசரி இப்பத்தியிலே என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்பது பற்றி மனதில் பெரிய போராட்டம்நடக்கும். அவ்வவ் போது ஏற்படும் அனுபவங்களை வைத்தே பொதுவாக எழுத மனம்தூண்டும். இச்சமயத்தில் என் அன்பர்கள் தங்கள் பயனுள்ள அனுபவங்களை எழுதி அனுப்பினல் எனக்கு மிக மிக உதவியாக இருக்கும். இன்று இதை எழுத, கொழும்பு அன்பர் எழுதிய கடிதம் மிகவும் பயன்பட்டு, இன்றைய எனது பிரச்னையைத் தீர்த்தது! இதற்காக அவருக்கு மற்றொரு நன்றி. வாசமுள்ள வண்ண மலர்கள் கிடைப்பதாயின், அவற்றை இங்கு அன்புடன் வரவேற்று பலருக்கும் பயன்படும்படி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றேன்.

இங்கு எழுதுவதில் எவ்வளவோ குற்றங்குறைகளுண்டென்பதை உணர்வேன். ஆனல் "குற்றம் நீ குணங்கள் நீ கூடலால வாயிலாய்" என்ற அருள் வாக்கை அன்றுடம் நினைந்து கொள்வதால், மனதுக்கு வேண்டிய ஆறுதல் கிடைப்பதாகவுள்ளது. தப்புத் தவறுகள் இருப்பின், என் அன்பர்கள் பெரியமனது வைத்து தயவுசெய்து மன்னிக்க வேண்டுகிறேன். எழுதுவதே என் பிழைப்பாகவும் ஆகிவிட்டதால் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை என்ன செய்யலாம்.

* * *

நாளைக்குத் தைப்பூசம். யாழ்ப்பாணச் சிறைச்சாலை சைவ ஊழியர் சங்கத்தார் கோட்டை முனீஸ்வரன் தேவாலயத்திலே திருவிழாவை மிக விசேஷமாகக் கொண்டாடுவதாகவும், பகல் 12 முதல் இரவு 9-30 வரை அபிஷேகம், அன்னதானம், சங்கீத கதாப்பிரசங்கம் எல்லாம் நடப்பதாகவும், விசேஷ மேளக் கச்சேரிகளும் உண்டென்றும் ஓர் அன்பர்வந்து தெரிவித்

(5-ம் பக்கம் பார்க்க)

# ‘தமிழாசிரியர் வழக்கு தொடரவேண்டும்’

## சிங்கள நிபந்தனைக்கு மத்திய மாகாணதமிழாசிரியர்யோசனை

நாவலப்பிட்டி, செவ்வாய்

“தமிழாசிரியர்கள் சிங்களம் படித்தல் சம்பந்தமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துவருவதைப் பற்றி அகிலஇலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மௌனம் சாதிப்பதையிட்டு இச்சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன் கல்விமந்திரியைப் பேட்டிகண்டு தமிழாசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை நீக்குமாறு அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம் கோரவேண்டும்.”

இவ்வாறுகூறும் தீர்மானம் ஒன்று மத்தியமாகாணத் தமிழாசிரியர்சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் உபதலைவர் திரு. வே. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டம் ஆசிரியர் திரு. சி. இராசநாயகம் ஓதிய தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமானது.

தமிழாசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதிக்கு நீதி வழங்காத பட்சத்தில் அகில இலங்கையிலுமுள்ள தமிழாசிரியர்கள் ஏகோபித்து வேலை நிறுத்தம்செய்ய அ. இ. த. ஆ. சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்தும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது,

நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தின்படி தமிழாசிரியர்கள் தங்கள் கடிதத் தொடர்புகளை அரசாங்கத்துடன் தமிழ்மொழியில்வைக்கக் கூடியதாக இருக்கையில் அச் சட்டத்தை முறியடிக்கத்தக்க வகையில் தமிழ்,ஆங்கில ஆசிரியர்கள் சிங்களத்தில்தான் தொடர்புகொள்ள வேண்டுமென்ற கட்டளைக்கெதிராக அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் வழக்குத்தொடர வேண்டும் என்றுகூறும் மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றபபட்டது.

——

## அரசாங்க யோசனைக்கு கூ. வங்கிகள் எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு வங்கிகளை, மக்கள் வங்கியின் கிளைகளாக மாற்றுவதென்ற அரசாங்கத்தின் யோசனைக்கு கொழும்பு மாவட்டத்துக்கு வெளியேயுள்ள ஏராளமான கூட்டுறவு வங்கிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

சில கூட்டுறவு வங்கிகளில் காசோலையை மாற்றுவதற்கு யாரும் கொண்டு சென்ருல், அங்கு பணம் இல்லையென்றும் வர்த்தக ஸ்தாபனத்தில் அக் காசோலையை மாற்றும்படி வங்கியில் ஆலோசனை கூறப்படுவதாகவும் தெரியவருகிவது. வர்த்தக ஸ்தாபனத்தில் காசோலையை மாற்றுவதற்கு கமிஷன் வேறு கொடுக்கப்பட வேண்டியநிலை, காசோலையைத் திருப்பவருக்கு ஏற்படுகிறது.

——

## ஜாகர்த்தாவில் கிளர்ச்சி தலைவர்

ஜாகர்த்தா, பெப். 4

புருனி கிளர்ச்சித் தலைவர் அஸஹாரி ஜாகர்த்தாவில் தலைமறைவாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது தங்கனிகாவில் நடைபெறும் ஆசிய ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் அவரைக் கலந்து கொள்ளாமல் செய்வதில் இந்தோனஷியா வெற்றியடைந்திருப்தாகவும் கூறப்படுகிறது.

## “இல்லற துறவற வழிகாட்டிகள்”

நாவலப்பிட்டி, செவ்வாய்

“இல்லறத்தார் எப்படி வாழவேண்டுமென்பதை வாழ்க்கையில் காட்டியவர் மகாத்மா காந்தி. துறவற வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கி இந்து மதப் பெருமையை அகில உலகத்திற்கும் தெளிவுபடுத்தினர் சுவாமி விவேகானந்தர். இருவர் வாழ்க்கையும் பூரணத்துவம் பெற்றது. எவரும் பின்பற்றக்கூடிய சிறப்புப் பெற்றது.” என்று ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா கொத்மலையிலுள்ளவெஸ்ரோல் தோட்டம் இருளக்கலை டிவிஷனில் நடைபெற்ற சமய வழிபாட்டுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

டாக்டர் திரு. டி. செல்லையா இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேச்சாளர்களை வரவேற்றுப் பேசினர். திரு. நா. அருமைநாயகம் கூட்டு வழிபாடு நடத்தினர்.

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் வடிவேற் சுவாமி பேசுகையில் “வாழ்க்கைப் பாதை துன்பமயமானது. இத்தகைய கஷ்டங்களின் மத்தியில் அரும் பெரும் துணையாக இருப்பவர் ஆண்டவன்தான். ஆண்டவன் அருள் பெற்றவர்களின் துணைகொண்டு நல்ல பண்புடன் வாழவேண்டும்” என்ருர்.

——

## “கூட்டுறவு சமாஜங்கள் மூலம் நாட்டுக்கு நன்மை” — எம். பி.

“இன்றைய நிலையில் பொது மக்களுக்கும், குறிப்பாக அரசாங்கத்துக்கும் அதிக நன்மைகளைக் கூட்டுறவு சமாஜங்களால் செய்யமுடியும். ஒரு சமாஜத்தின் நோக்கம் லாபம் பெறுவதற்காக மட்டுமல்லாது கொந்தராத்துக்கள் மூலம் ஓரளவு வேலைஇல்லாத் திண்டாட்டத்தை குறைப்பதாகவும் இருக்கிறது. இயன்ற வழிகளில் எல்லாப்பொதுமக்களுக்கும் நன்மையளிக்கக் கூடிய திட்டங்களில் கூட்டுறவு இயக்கங்கள் ஈடுபடவேண்டும். மேற்படி சமாஜம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனாக, சுமரர் ரூ. 2 லட்சம் பெறுமதியான கொந்தராத்துக்களைப்பெற்று 150 தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பளித்திருப்பது பெருமைக்குரிய காரியமாகும்.”

இவ்வாறு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க யூனியனின் விசேஷ கூட்டத்தில், மேற்படி சமாஜத் தலைவரான ஜனப். ஏ. எல். ஏ. மஜீத் பேசுகையில்கூறினர்.

கிண்ணியாத்துறை, வனபரிபாலனம் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய கொந்தராத்துக்களை மேற்படி சமாஜம் எடுக்க வேண்டும் என்ற ஒரு தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

——

## மக்கள் வங்கி

திருக்கோணமலை, செவ்வாய்

திருக்கோணமலையில் மக்கள் வங்கி கிளையொன்றை நிறுவும்படி சாம்பல் தீவு கிராம சபைத் தலைவர் திரு. வ. நா. தம்பிராசா திருமலை எம். பி., திருமலை அரசாங்க அதிபர், உள்நாட்டு கலாச்சார மந்திரி ஆகியோரைக் கேட்டுள்ளார்.

## ‘கடந்த காலத்தை மறககக் கூடாது’ —மந்திரி

அனுராதபுரம், செவ்வாய்

‘கடந்த கால அனுபவத்தைக் கொண்டு எதிர்காலத்தை நாம் திட்டமிடவேண்டும்’ என்று அனுராதபுரத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இன்று நடைபெறும் சுதந்திரதின விழாபோன்ற மற்றும் விழாக்களில் பொதுமனிதனும் கலந்துகொள்ள வசதிசெய்து கொடுப்பதே மக்கள் அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என்று கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: “டெம்பிள் டிரீஸில் நடைபெறும் வைபவங்களுக்கு கிராமப்புறமக்களை அழைப்பது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஓர் சிறப்புமிக்க கொள்கையாகும். இச் சந்தர்ப்பத்தில், காலஞ் சென்ற பிரதமரை நினைப்பது சாலச்சிறந்ததாகும்.

மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும். நாடு சுதந்திரமாகவிருக்க வேண்டுமென்பதே காலஞ்சென்ற பிரதமரின் முக்கிய குறிக்கோளாகும். இதையே அவர் பலதடவை எடுத்துக் கூறியிருக்கிருர். அவரின் குறிக்கோளைப் போல நாமும் எதுவித பாகுபாடுமின்றி நாட்டின் நன்மை குறித்து ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும் எமது முயற்சி வெற்றியளிக்கும் என்பதில் எனக்குஎள்ளளவும் சந்தேகமில்லை.

——

## ‘வழிகாட்டும் ஞானி விவேகானந்தர்’

திருக்கோணமலை, செவ்வாய்

“உடல்நலம், உயிர்நலம் ஆகியவற்றில் சிறந்துவிளங்கவேண்டின் உடல் நலத்துக்கும் உயிர் நலத்துக்கும் இருப்பிடமாகத் திகழ்ந்த சுவாமி விவேகானந்த அடிகளாரின் பொன் மொழிகளைப் பின்பற்றவேண்டும்”.

இவ்வாறு பட்டிருப்பு மகா வித்தியாலய ஆசிரியரும் திருக்கோணமலை திருவள்ளுவர் கழகப் புலவருமான திரு. பெ. பொ. சிவசேகரம் விவேகானந்த சங்க ஆதரவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வ்வேகானந்தர் நூற்ருண்டு விழாவில் உரைநிகழ்த்துகையில கூறினர்.

திரு சிவசேகரம் மேலும் பேசுகையில் கூறியதாவது :

ஒவ்வொரு மனிதனிடமும் ஐம்புலன் என்னும் ஐந்து பசுக்கள் உள. அவை மேய்ப்பாரின்றி அலைகின்றன. அவற்றை ஞானி என்ற மேய்ப்பான் மேய்ப்பின் ஒழுங்காக வாழும். இத்தகைய மேய்ப்பான்தான் மெய் ஞானி விவேகானந்தர்.

இறைவனைக் காணுதல் வேண்டும் என்ற உளக் கிளர்ச்சியுடன் இறைவனைக் காட்டுவாயா? என்று இராமகிருஷ்ணரிடம் வேண்டினர். இராமகிருஷ்ணரிடம் விடையும் கண்டார்.

வழக்கறிஞர் திரு. பொ, இரங்கநாதன தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருமதி பத்மலோசினி தர்மலிங்கம், திரு. ஏகாம்பரம், திரு. அ சச்சிதானந்தம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

——

## ஆசிய—ஆபிரிக்க ஒற்றுமை ம[illegible]டு

மோஷி, [illegible]பப். 5

“தென்னுபிரிக்காவில் எங்கள் சகோதரர்கள் கொடிய அடக்குமுறையின் கீழ் சிக்கித் தவிப்பதை நாம் பாத்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது” என்று தங்கநிக்கா ஜனதிபதி ஜூலியஸ்நியாரேரே நேற்று இங்கு ஆரம்பமான ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

# ‘ஆசிரிய கலாசாலை கிழக்கு மாகாணத்தவருக்கே’

## எம். பி.யிடம் ஆசிரியர்சங்கம்கோரிக்கை

திருக்கோணமலை, செவ்வாய்

மட்டுநகர் ஆசிரியகலாசாலை கிழக்கு மாகாணத்தவருக்கென நிறுவப்பட்டதென்றும் அந்த ஒழுங்குகள் மீறப்பட்டு ஏனைய மாகாணத்தவர்கள் அக்கலாசாலையில் அனுமதிக்கப்பட்டு வருவதாயும் இந்நிலை நிறுத்தப்பட்டு கிழக்கு மாகாணத்தவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படவேண்டுமென்றும் கிழக்கு இலங்கைத் தமிழர் சுயமொழி ஆசிரியர் சங்கம் ஒரு கோரிக்கையை திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. என். ஆர். இராஜவரோதயத்திடம் சமர்ப்பித்துள்ளது.

1. சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருள்காப்பாளர் ஆகிய மூவரும் திருக்கோணமலைப் பிரதிநிதியை அவரது இல்லத்தில் சந்தித்து இக் கோரிக்கை உட்பட மொத்தம் எட்டுக் கோரிக்கைகளைக் கொண்டதொரு விண்ணப்பத்தை அவரிடம் சமர்ப்பித்தார்கள்.

2. அவர்களது மற்றொருகோரிக்கை திருக்கோணமலைப் பகுதியில்உள்ள பட்டதாரிமாணவர்களை அப்பகுதியில் உள்ள காலியான ஸ்தானங்களுக்கு நியமிக்க கேட்டுக்கொள்கிறது.

3. திருமலைமாவட்ட பற்ருக்குறைப்பிரதேசம். இப்பகுதிப் பாடசாலைகளில் அநேக வெற்றிடங்கள் அவ்வப்போது ஏற்படுகின்றன. ஆகவே பயிற்சி பெற்று வெளியேறும் திருமலைவாசிகளை வெளிமாகாணங்களில் நியமிக்காது திருக்கோணமலை மாவட்டத்திலேயே நியமிக்க வேண்டும்.

4. திருக்கோணமலையில் மத்திய பாடசாலை ஒன்று அமைத்தல்.

5. விடுதிப்பாடசாலை ஒன்று அமைத்தல்.

ஆசிரியர்சங்கத்தின் கோரிக்கைகள்பற்றி கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேசுவதாக திருமலை எம். பி.,அவர்களிடம் கூறினர்.

——

## உதவி கமிஷனர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹும் முஸ்லிம்களுக்கு மூன்று பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்தார்களாம்.

திரு. பி. எம். ஜோன் சாட்சியமளிக்கையில், கரையூர்வீடமைப்புத்திட்டதைச் சேர்ந்த வட்டாரம் ஒன்று ‘டுவைன்’ வட்டாரம் என்ற பெயரில் பிரிக்கப்பட வேண்டுமென்றும் 1896-ம் ஆண்டில் கரையூரில் வீடமைப்புத் திட்டம் ஒன்று அமைப்பதற்கு அப்பொழுதிருந்த வில்லியம் டுவைன் என்ற ஒரு கவர்னர் திட்டமிட்டதாகவும் அவரது நினைவாக இந்த வட்டாரத்துக்குப் பெயர் இடப்பட வேண்டுமென்றும் கூறியதாகத் தெரிகிறது. நாவாந்துறை, பாஷையூர் வட்டாரங்கள் 21 வட்டாரங்களுக்குள் அமையலாமெனவும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

### சிறுபான்மைத் தமிழர்

திரு. பீட்டர் சோமசுந்தரம் சாட்சியமளிக்கையில், மாநகர சபையில் சிறுபான்மைத் தமிழருக்கு மூன்று பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியதாக வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டும். மூன்ரும் வட்டாரம் சிறுபான்மைத் தமிழர்களுக்கென்றே அமைக்கப்பட்டதால் அது அவர்களுக்கு இருக்க வேண்டுமென்றும் கூறினராம். முஸ்லிம் வாக்காளரின் எண்ணிக்கை இரண்டாயிரத்து ஐந்நூறுதானென்றும் எனவே முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை மூன்ருக அதிகரிப்பது இதர வட்டாரங்களைப் பாதிக்குமென்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது, பதினன்காவது வட்டாரத்தில் சிறுபான்மைத் தமிழர் அதிகம் இருப்பதால் அங்குள்ளவர்களுக்கு ஒரு வட்டாரம் பிரிக்கப்படலாமென்று அவர் கூறினராம். அரியாலையிலும் பறையசமூகத்தவருக்கென ஒரு வட்டாரம் பிரிக்கப்படலாமென திரு. சோமசுந்தரம் கூறியதாகத் தெரிகிறது.

திருவாளர்கள் சங்கரப்பிள்ளையும் ராஜநாயகமும் சாட்சியமளிக்கையில் 21 வட்டாரங்களாகப் பிரிப்பதை ஆதரித்தனரென்று தெரிகிறது. திரு கே. எஸ.நடராசாசாட்சியமளிக்கையில் 23 வட்டாரங்களாகப் பிரிக்கலாமென யோசனை கூறியதாகத் தெரிகிறது.

## யாத்திரிகர்களுக்கு மலிவு டிக்கட்

கொழும்பு, புதன்

இம்மாதம் முதல் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 வரை சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செய்வோரின் சௌகரியத்தை உத்தேசித்து அரசினர் ரயில்வேப் பகுதியார் அட்டன் மஸ்கெலியாப் பாதையில் ரயில்—பஸ் இணைப்பு சேவை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக ரயில்வே அறிக்கை தெரிவிக்கிறது.

ரயில் — பஸ் இரண்டுக்கும் சேர்ந்தாற்போல ஒரே பிரயாணச் சீட்டு குறைக்கப்பட்ட மூன்ரும் வகுப்புக் கட்டணத்துக்கு 7 நாட்களில் போய் திரும்பக்கூடிய வசதியுடன் யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படுமென்றும் அறிக்கை மேலும் கூறுகிறது.

——

## ரூபா 50 லட்சம் பெறுமதியான கஞ்சாசெடிகள் கைப்பற்றப்பட்டன

அம்பாந்தோட்டை செவ்

சுமார் ஐம்பது லட்சம்ரூபா பெறுமதியுள்ள கஞ்சாச்செடிகளை, அம்பாந்தோட்டை கலால் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். வெலிவிவ என்ற இடத்துக்கு சமீபத்திலுள்ள மகாகமபஹிறவவிலுள்ள முடிக்குரிய காடுகளில் இக் கஞ்சாச் செடிகள் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கஞ்சா செடிகள் வளர்ந்த சேனைக்குள் கலால் அதிகாரிகள் நுழைந்ததும், சேனையிலுள்ள இருவர் ஓடித் தப்பிவிட்டனர் என்றும் அவர்களைக் கண்டுபிடிப்பதில் கலால் அதிகாரிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எதுவும் பலிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட கஞ்சா செடிகள் நன்ருக வளர்ந்திருந்தன என்றும் அறுவடைக்குத் தயாராக விருந்ததென்றும் கூறப்படுகிறது.

——

## இலவச படக்காட்சி

மாதகல், செவ்வாய்

மாதகல் சென் தோமாஸ் சன சமூக நிலயத்தினரின் ஆதரவில் எதிர்வரும் சனிக்கிழமை அமெரிக்க தகவல் பகுதியினர் ஓர் இலவச படக்காட்சியை சென் தோமாஸ் ஆலய முன்றலில் காண்பிப்பார்கள்.

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தார். சிறைச்சாலை சைவ ஊழியருக்கு என் பாராட்டுகள். சிறையிலே கைதிகளாகவுள்ள அன்பர்களும் இத்திருவிழாவில்கலந்துகொண்டு, முன்னீஸ்வரனின் அருளைப்பெற முடிவதாயின் எவ்வளவு நன்ருக இருக்கும்!

# மங்கையர் உலகம்

## குடும்பக் கலை

—கல்யாணி—

வீட்டின் சமையல் அறை சுத்தமாவும், அழகாகவும் எந்நேரமும் பளிச்சென அழகாக இருந்தால் அதுவே ஒரு வீட்டிற்குத் தனிக் கவர்ச்சியைக் கொடுக்குமல்லவா? சமையலறையில் பெரும்பகுதி வேலைகளைக் கவனிக்க வீட்டில் வேலைக்காரர் இருந்தாலும் அதன் தூய்மையைப் பாதுகாக்கும் பொறுப்பு குடும்பத் தலைவியைச் சார்ந்ததென்பதை அவள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

சிறு வீடுகளில் இருக்கும் சமையலறைகளின் சுத்தமும், அழகும் சில சமயங்களில் பெரிய வீடுகளில் இருக்கும் சமையல் அறைகளில் இருப்பதில்லை.

ஒரு சமையலறையை சுத்தமாக வைத்திருப்பதற்கு உதவியாக குடும்பப் பெண்ணுக்கு சில குறிப்புகள் தர எண்ணுகிறேன்.

★ அழுக்கு போடுவதற்கு சமையலறையில் ஒரு வாளி எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். ஏதோ ஒன்றினால் அதை மூடி வைத்திருக்கவேண்டும். ஒரு துண்டு பலகைகூட இதற்குப் போதும். பிழிந்த தேங்காய்ப்பூ, காய்கறித்தோல், வெங்காயத் தோல் போன்ற வேண்டாத பொருள்களை உடனுக்குடன் இதற்குள்ளே போட்டுவிட்டால் சமயலறையில் குப்பை சேராது, ஈ, கொசு உபத்திரவம் இருக்காது.

★ துளைகள் வைத்த ஒரு பலகையை சமயலறைச் சுவரில் ஒரு பக்கமாகப் பொருத்தி வைத்து அதில் சமையலறைப் பாவிப்புக்குள்ள சாமான்களை மாட்டிவிடலாம். இப்பகடிய களகு, அரித்தட்டு, கலைப்பெட்டிபோன்ற பொருள்களையும் இப்படிச் சீராக வைக்கலாம். அப்பொழுது இப்பொருட்கள் எங்கும் பரவி இடத்தை அடைக்காமலிருக்கும். கண்டபடி அங்குமிங்குமாய் கிடந்து கண்ணை உறுத்தாமலிருக்கும். சமையலறைச் சுவரிலேயே ஓர் அலுமாரி இருப்பின் நன்று. அல்லது தட்டு தட்டாக உள்ள ஒரு "இருக்கை"யை சுவரில் பொருத்தி அதில் அன்றாடத் தேவைக்கான பொருட்களை வைக்கலாம். உதாரணமாக மிளகாய்த்தூள், கோப்பி, தேயிலை, சீனி, கறிச்சரக்குகள் என்பனவற்றைத் தகர டப்பாக்களிலோ போத்தல்களிலோ அடைத்து இந்த இருக்கையிலோ அலுமாரியிலோ வைக்கலாம்.

★ அடுப்பு மேடைக்கு அருகில், அவ்வப்போது கை கழுவித்துடைத்துக்கொள்ளக் கூடியதாக ஒரு பழைய துணி போட்டிருக்கவேண்டும். பாத்திரங்களில் ஒட்டியிருக்கும் கரி கைகளில் ஒட்டி அதன்பின் முகத்திலும் ஒட்டிக்கொள்ளாமல் தடுக்க இந்தத் துணி பெரிதும் உதவியாகவிருக்கும். மேலும் வெளியே முற்றத்தில் ஒரு பாத்திரத்தில் எப்போதும் தண்ணீர் நிரப்பிவைத்துக் கொண்டாலும் அவ்வப்போது கைகளை அலம்பிக் கொள்வதற்கு சௌகரியமாயிருக்கும்.

★ கழுவுவதற்கு சமையலறைக்குள்ளேயே நிறைய சட்டிபெட்டிகள் என்று இருப்பதனால் எல்லாவற்றையும் நன்றாக அடுக்கி வைத்து கடைசியாக வேலைகள் யாவும் முடிந்த பின் கழுவி சமையலறையையும் பெருக்கிவிடலாம்.

நமது தேசங்களில் அதிகமாக அடுப்புகளையே நாம் பாவித்து வருவதனால் அடுப்பில் சாம்பலை நிறையவிடாது உடனுக்குடன் அகற்றிவந்தால் சமயலறை சுத்தமாகும். மீன் குஞ்சுக்கு நீந்த யாரும் கற்றுக் கொடுப்பதில்லை. அது போல குடும்பப் பெண்கள் இவ்விஷயங்களை யாரும் கற்றுக் கொடுத்துத் தெரிந்து கொள்வதில்லை.

உரிய காலமும், பருவமும், பொறுப்பும் ஏற்பட இதையெல்லாம் எப்படியோ அவர்கள் தெரிந்துகொள்கிறார்கள் ஒருத்தி கல்யாணமாகி கணவனுக்குப் பின்னால் நாளை தனிக் குடித்தனம் செய்யப் போகும் போது இதுமாதிரி குடும்ப நிர்வாக காரியங்கள் அனைத்தும் கற்றுணர்ந்து கைவந்த 'மேதை' யாகத்தான் போகிறாள். குடித்தனமோ துரைத்தனமோ என்று சொல்வார்கள். அதற்குமேல் அது ஒரு கலையாகவுமே இருக்கிறது இந்தக் கலையின் இரகசியம் இந்த துரைத்தனத்துக்கான நாடிவிசை அவர்களுக்கே தெரிந்திருக்கிறது.

## பெண்களுக்கு இராணுவப் பயிற்சி

### சென்னை சட்டசபை விவாதம்

சென்னை, பெப். 3

மன உறுதி படைத்த பெண்ணுக்கு ஆண் ஈடு சொல்லமுடியாது. அப்படியிருக்க அவள் கையில் துப்பாக்கியையும் கொடுத்துவிட்டால் நாம் ஓட்டம் பிடிக்கவேண்டியதுதான் என்று ஆண்கள் பயப்படுகிறார்கள் போலும் என்று அமைச்சர் பக்தவத்சலம் நேற்றைய சென்னை சட்டசபை விவாதத்தின்போது கூறினர்.

பெண்களுக்கு தேசிய பாதுகாப்பு சேவையில் பயிற்சியளிப்பதுபற்றி சட்டசபையில் நேற்று விவாதம் நடைபெற்றது.

பெண்களுக்கு அந்தப் பயிற்சி அளிப்பது விவேகமல்ல என்று காங்கிரஸ் அங்கத்தவரான திரு தட்சிணாமூர்த்தி கவுண்டர் கூறினர். வீடுவாசல்களை விட்டுப் பெண்கள் போர்க்கள சேவைக்குப் போய்விட்டால் ஆண்கள் வீடு திரும்பி குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைக்க முடியுமா? அப்படி அவர்கள் தாலாட்டுப் பாடினாலும் குழந்தைகள் அழத்தொடங்கிவிடாதா? என்று அவர் கேட்டார். திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் என்ற மற்றொரு காங்கிரஸ் கட்சி மெம்பரும் இக்கருத்தையே ஆதரித்தார் இயற்கையாகவே பெண்கள் யுத்த சேவைக்குத் தகுதிபடைத்தவர்களல்ல என்பது அவர் கருத்து. இப்படிச் சொல்வதால் பெண்களுக்கு என். ஸி. ஸி. பயற்சி அளிப்பது வீண் என்றுதான் உறுதியாக எண்ணிவிடக்கூடாது என்றார்.

சாதாரணமாக இம்மாதிரி விஷயங்களில் திரு. பக்தவத்சலம் பழங்கால ரீதியில் அபிப்பிராயம் உள்ளவர் என்பதால் அவரும் இக்கருத்தை ஆதரிப்பார் என்றே யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனல் அவரோ அதற்கு மாருக பெண்களுக்கு என். ஸி. ஸி. பயிற்சி அளிப்பதை ஆதரித்தார்.

ஜான்ஸி ராணியைப்போல வீராங்கனைகள் தமிழ்நாடு அறியாததல்ல. பெண்கள் போர்க்களம் போகவேண்டிய அவசியமில்லை என்றும் அவர்களுடைய தற்பாதுகாப்புக்குக் கூட இராணுவப் பயிற்சி அவசியம் என்றும் திரு. பக்தவத்சலம் மேலும் கூறினர்.

## மானிப்பாய் மாதர் சங்கம்

மானிப்பாய், செவ்வாய்

மானிப்பாய் கிராம மாதர் முன்னேற்றச்சங்க வருடாந்தக் கூட்டம் திருமதி என். இராஜதுரை தலைமையில் நடைபெற்றது. போஷகராக இராசவாச முதலியார் ஸி. தியாகராஜாவும், தலைவராக திருமதி. எஸ். இராமேஸ்வரமும், காரியதரிசியாக திருமதி எஸ். எஸ். நாதனும், தனதிகாரியாக திருமதி சி. சின்னத்தம்பியும் நிர்வாகசபையினராக திருமதிகள் ஸி. தியாகராஜா, பி. கதிரவேலு, ஜே. பி. நாகலிங்கம், கே. எஸ். சௌந்தரநாயகம், என். இராஜதுரை, எஸ். ஆறுமுகம், கே. தம்பையா, டி. சின்னத்தம்பி, எஸ். முத்துக்குமாரசாமி ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தையல்நிலையத்தையும் நெசவு நிலையத்தையும் ஒரு கட்டிடத்தில் வைப்பதெனவும், சங்க நிதி திருப்திகரமாக இல்லாததினல் நிதிஉதவி படக்காட்சி ஒன்றினை ஒழுங்குசெய்து நிதி திரட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் இராசவாசல் முதலியார் திரு. சி. தியாகராஜா, காரியாதிகாரி திரு. பி. ஜே. அருள்நாயகம் ஆகியோரும் பேசினர்.

## மந்திரிக்கு ஊழியர் ஆலோசனை

கொழும்பு, செவ்வாய்

ரயில் போக்குவரத்துச் சேவையைச் சிக்கனமாகவும் திறமையாகவும் நடத்துவது பற்றி நிதி, போக்குவரத்து, மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லைக்கு ரயில்வே யூனியன்கள் ஆலோசனை தெரிவிக்கவிருக்கின்றன.

மந்திரி கலுகல்லை இந்த யூனியன்களைச் சேர்ந்த பிரதிநிதிகளை இம்மாதம் 11-ம் திகதி சந்தித்து இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார். அன்று ரயில் போக்குவரத்துச் சேவையைச் சிக்கனமாக நடத்துவதற்காக ஆலோசனை தெரிவிக்கும் விசேஷ கமிட்டியொன்று நியமிக்கப்படும். இந்தக்கமிட்டியில் 7 யூனியன் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பார்கள்

இலாகாவில் கடமையாற்றும் ஊழியர்கள் மந்திரிக்கு ஆலோசனை தெரிவிக்கும் கமிட்டியில் அங்கம் வகிப்பது இதுவே முதல் தடவையாகும்





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெ[illegible]யிலும், மென்மையான பல [illegible]ண்ணங்களிலும் கிடைக்கும். [illegible]யம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/T...

# மனிதனுக்கு பிந்தியதே மொழி

## ஆதலால் மொழிக்கு அவன் அடிமைப்படக்கூடாது

### எழுத்தாளர் விழாவில் நீதிபதி கருத்துரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"மனித இனத்தின் உணர்ச்சிகளை வெளிக்கொண்டு வருவதே மொழி எனப்படும். மனிதனுக்குப் பிந்தியதே மொழி. அதனுல் தனக்குப் பிந்திய ஒன்றுக்கு மனிதன் அடிமையாகிவிடுவது மதியீனம்" என்பதாத நேற்று மாலை வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலை மண்டபத்தில் திரு. இளங்கீரன் தலைமையில் நடைபெற்ற 'டானியல் கதைகள்' வெளியீட்டுவிழாவின் போது மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் கூறினுர்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

இலக்கியத்திற்குத்தான் இலக்கணமேதவிர இலக்கணத்திற்காக இலக்கியமல்ல. மனிதனைச் சூழஉள்ள தன்மைகள் அவன் வளர்ச்சியோடு சேர்ந்துமாறுகின்றன. இதன்படி, இலக்கியங்களும் மாறுகின்றன. இது இயற்கை நியதி.

கதை இலக்கியத்துக்கு இலக்கணம் எவ்வாறு அமையவேண்டும் என்பது குறித்து நீதிபதி திரு. தனபாலசிங்கம் பேசியபொழுது இலக்கணத் தமிழில் கதைகளை யாராவது எழுதத்துணிந்தால் பண்டிதர்கள்தான் படிப்பார்கள். ஆனுல் கதைகளைப் பண்டிதர்கள்தாம் படிக்கவேண்டுமென்ற நியதி எங்கேயாவது இருக்கிறதா என்று கேட்டார். பாமரமக்களும் கதைகளை வாசித்து முன்னேறவேண்டுமாதலால் அந்தக்கதைகள் சிறிதாயிருந்தாலும் பெரிதாயிருந்தாலும் சரி இலகுவான உரைநடையில்தான் எழுதப்படவேண்டும் என்ருர். மேலும் அவர் பேசியதாவது:- மொழி வேறு அதன் இலக்கணம் வேறு. மொழி முந்தியது. இலக்கணம் பிந்தியது. உணர்ச்சிவசப்பட்டுப் பேசும்போது ஒருவன் இலக்கணசுத்தம் பார்த்துப் பேசுவதில்லை. இலக்கணத்தோடுதான் எழுதவேண்டும் என்று வற்புறுத்தப்படுமானுல் அப்பொழுது யாருமே எழுதவேண்டாம் என்றே நான் சொல்வேன்.

விழாவுக்குத் தலைமைவகித்த திரு. இளங்கீரன் தலைமை உரையின்போது அண்மையில் காலமான தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. ப. ஜீவானந்தம் அவரது காலத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய பணிகளை விவரித்தார். அவரது மறைவுக்கு துக்கம் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தையும் தலைவர் பிரேரித்தார்.

பொதுச் செயலாளர் பிரேம்ஜி பேசுகையில், இந்த நாட்டின் சிருஷ்டி இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை வெளிக்கொணரும் பணியில் மட்டுமன்றி இன்று தேசத்துக்குத் தேவையானதெனக் கருதப்படும் சகல எழுத்துக்களையுமே மக்கள் மத்தியில் அரங்கேற்ற எழுத்தாளர்கள் எடுத்துவரும் இப்பணிக்கு எல்லா மக்களினதும் உதவிகளை வேண்டி நிற்பதாகக் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர் திரு. இராச அரியரத்தினம் பாரட்டுரை நிகழ்த்துகையில் டானியல் அவர்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பாராட்டுக்குரியவையென்றும் அவரது இலக்கியசேவை தொடர்ந்து வளம்பெற வாழ்த்துவதாகவும் கூறினுர்.

திரு.க. கைலாசபதி, திரு. அ. ந. கந்தசாமி ஆகியோர் சிறப்புரை வழங்கினுர்கள். திரு. கே. பசுபதி விழாவுக்கு வந்திருந்த வாழ்த்துச்செய்திகளை வாசித்தார். திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு. எம். காத்திகேசன், 'சிற்பி' ஈழத்துச்சோமு, டாக்டர் சிவஞானசுந்தரம், திருமதி வேதவல்லி கந்தையா, திரு. கா. சிவத்தம்பி, சொக்கன திரு. என. ரணசிங் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினர். திருமதி பத்மா சோமநாதன் எழுத்தாளர் கீதம் பாடினுர்.

---

## இலக்கிய ரசிகர் குழுவின் சிறுகதைப் போட்டி முடிவு

கொழும்பு செவ்வாய்

இலக்கிய ரசிகர் குழுவின் செயலாளர்கள் விடுத்துள்ள ஓர் அறிக்கையின்படி இலக்கிய ரசிகர் குழு நடாத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**முதற் பரிசு ரூபா 100-00**

'சிரத்தை' சத்தியன், காரைதீவு. மட்டக்களப்பு.

**2-ம் பரிசு ரூபா 50-00**

'போரும் முடிவும்' யோ. பெனடிக்ற் பாலன், நல்லூர், யாழ்ப்பாணம்.

**3-ம் பரிசு ரூபா 50-00**

'அதர்' மருதூர்க் கொத்தன், மருதமுனை, மட்டக்களப்பு. 'மோகத்தைக் கொன்றுவிடு' ஜோர்ஜ் சந்திரசேகரன், கிருன்பாஸ், கொழும்பு. (இருவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

---

## 60 பேர் கைது

### சட்டவிரோதமாக வந்தவர்கள்

யாழ்ப்பாணம், செவ்

சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின் பேரில் கீரிமலையைச் சேர்ந்த கடற்கரையில் சுமார் 60 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத்தெரிகிறது. இந்த 60 பேரும் படகொன்றில் இந்தியாவில் இருந்து இங்கு வந்துகொண்டிருந்த போது கடற்கரைக்குச் சமீபமாகக் கைது செய்யப்பட்டனராம்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்த 60 பேரும் ஊர்காவற்றுறைப் பொலிசில் ஒப்படைக்கப் பட்டிருப்பதாகவும் இது சம்பந்தமாக விசாரணை நடந்து வருவதாகவும் தெரிகிறது.

---

## உதயசூரியன் வெற்றிபெற்றது

திருக்கோணமலை, செவ்வாய்

திருக்கோணமலை உதயசூரியன் விளையாட்டுக்குழுவினருக்கும், மாத்தறை கிறீன் ஸ்டார் குழுவினருக்குமிடையே நடைபெற்ற ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் உதயசூரியன் குழுவினர் எட்டுக் கோல்கள் போட்டனர். மாத்தறைக் குழுவினர் ஒரு கோலாவது போடவில்லை.

உதயசூரியன் 'பி' குழுவினருக்கும், மாத்தறைக் குழுவினருக்கும் இடையே நடைபெற்ற இன்னேரு போட்டியில் உதயசூரியன் குழு மூன்றுகோல்களும் மாத்தறைக் குழு ஒரு கோலும் போட்டன.

---

## குருநகர் வெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

குருநகர் 'பி' கோஷ்டிக்கும், கிறீன்பீல்ட் 'பி' கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், குருநகர் கோஷ்டி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் 'சி' டிவிஷனின் கீழ் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல்ட் கோஷ்டி ஒரு கோலும் குருநகர் கோஷ்டி ஆறு கோல்களும் போட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற இவ்வுதை பந்தாட்டப் போட்டிக்கு திரு. தேவா மத்தியஸ்தம் வகித்தார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 6-2-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரிநட்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 ஜி. சண்முகானந்தம்—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 ரி. ஜெயதேவன்—பேச்சு, 9-30 என். அச்சுதன் பாகவதர்—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம், 7-45 மானுற்றின் கரையினிலே —தொடர்கதை, 8-00 என்னைும் காப்போம் (சென்னை அஞ்சல்), 8-10 வீணை இசை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

---

## சுயதேவைப் பூர்த்திக்கு சிரமதான இயக்கம் தேவை

மட்டக்களப்பு, செவ்வாய்

'இன்றைய நிலையில் நாம் நமது தேவைகள் அனைத்திற்கும் அரசாங்கத்தை நம்பியிருப்பதில் பயனில்லை. சுதேசி இயக்கங்களின் மூலம் நாம் நமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலவேண்டும்'.

மட்டக்களப்பு நகரசபைக் குடியேற்றத்திட்ட குடியேற்றப் பகுதி மக்களின் சமூக சேவை நிதிக்காக ஒழுங்குசெய்யப்பட்ட வினேத விற்பனை விழாவில் பேசுகையில் மட்டக்களப்பு எம். பி. செ. இராஜதுரை மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினுர். திரு. இராஜதுரை எம். பி. சம்பிரதாய முறைப்படி குத்துவிளக்கேற்றி விற்பனை விழாவை ஆரம்பித்து வைத்தார்.

---

## மட்டுநகர் வெற்றி

திருக்கோணமலை, செவ்வாய்

திருக்கோணமலை "தில்ஸ கிரிக்கட் கழகத்திற்கும்" மட்டக்களப்பு "யங்கோல்ட்ஸ் கிரிக்கட்" கழகத்திற்கும் இடையே திருக்கோணமலை மற்றுமதில் விளையாட்டரங்கில் நடைபெற்ற சினேக பூர்வீக கிரிக்கட் போட்டியில் மட்டுநகர் குழு முப்பத்திரண்டு ஓட்டங்களால் திருமலைக் குழுவை தோற்கடித்தது.

---

# இரு குழந்தைகள் வெட்டிக் கொலை

## மனைவிக்குப் படுகாயம்; கணவனுக்கு 'ரிமாண்ட்!'

### பருத்தித்துறையில் கோர சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இரு குழந்தைகளைக் கழுத்து வேறு உடல் வேருகத் துண்டித்து அக் குழந்தைகளின் தாயையும் வெட்டிய பரிதாப சம்பவம் பருத்தித்துறையில் நிகழ்ந்துள்ளது. கொலை செய்யப்பட்ட குழந்தைகளின் தாய் அபாயகரமான நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடுள்ளார். குழந்தைகளின் தந்தையான வெட்டுண்ட பெண்ணின் கணவன் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிருர்.

பருத்தித்துறையிலுள்ள திக்கம் என்னுமிடத்தைச் சேர்ந்த மானுண்டி என்னும் இடத்தில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மூன்று வயதுள்ள கணேசலிங்கம் என்னும் குழந்தையையும் பிறந்து 10 மாதங்களான சாந்தலிங்கம் என்னும் பச்சிளம் குழந்தையையும் கொடுவாக் கத்தியால் உடல் வேறு கழுத்து வேருகத் துண்டித்துவிட்டு, குழந்தைகளின் தாயான பார்வதி என்னும் பெண்ணையும் கணவன் வெட்டினுர். பார்வதி இடது கையில் மூன்று, நான்கு விரல்களை இழந்ததுடன் இடுப்பிலும், உடம்பின் பல இடங்களிலும் ஏற்பட்ட காயங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக பிள்ளைகளின் தந்தையும், காயமடைந்த பெண்ணின் கணவனுமான வல்லிபுரம் நடராசாவை பருத்தித்துறைப் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு. டி. ஆறுமுகம் கைதுசெய்து மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வயித்திலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தார். மாஜிஸ்டிரேட், நடராஜாவை இம்மாதம் 15-ம் திகதி வரை ரிமாண்டில்வைக்கும்படி உத்தரவிட்டார்.

இச் சம்பவத்திற்கு குடும்பத் தகராறுதான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

நடராஜா தமது தந்தைக்கு விருப்பமில்லாமலேதான் பார்வதியை மணஞ்செய்துகொண்டார் எனவும், முல்லைத்தீவில் 'லொறி' கிளீனராக இருந்த அவர் 4 மாதங்களுக்குமுன் வேலையை இழந்து, தமது தந்தையுடன்சேர்ந்துகொண்டு தமது குடும்பத்தில் அதிக சிரத்தை எடுக்கவில்லை எனவும் அதேபோல மனைவியும் கணவனிடம் அதிக அக்கறை காட்டவில்லை எனவும் கூறப்படுகிறது. ஒருவருக்கொருவர் கவனிக்காமலிருந்த ஆத்திரமே இச் சம்பவம் ஏற்படக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது. இது சம்பந்தமாக மேலும் புலன் விசாரணை நடைபெற்றுவருகியது.

---

## எம். பி. க்கள் கோரிக்கை

### சபைக்கமிட்டி ஆராயும்

கொழும்பு, திங்கள்

தீர்வைக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட கார்கள், பெட்ரோல், இரண்டு காரியாலய டெலிபோன்கள் தமக்கு வேண்டுமென்ற 36 எம். பிக்கள் சமர்ப்பித்த மகஜர் குறித்து ஜனப்பிரதிநிதிகள் சபையின் சபைக் கமிட்டி புதன் கிழமை கூடி ஆராயும்

எதிர்க்கட்சியொன்றின் தலைவர் ஒருவர் இது சம்பந்தமாகத் தெரிவிக்கையில்; அரசாங்க எம். பி. க்களின் வேண்டுகோளின் பேரில், 1961-ம் ஆண்டு கட்சித் தலைவர்கள், எம். பி. க்களின் அலவன்ஸை கூட்ட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது பற்றி ஆராய்ந்தனரென்றும் ஆனுல், நாட்டின் நிதி நிலைமை திருந்தும்வரை இக் கோரிக்கையை ஒத்திவைக்கும்படி அரசாங்கம் கேட்டுக் கொண்டதென்றும் கூறினுர்.

மகஜர் சமர்ப்பித்த 36 எம். பி. க்களில் 32 எம். பி. க்கள் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் 4 எம். பி. க்கள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களென்றும் தெரியவருகிறது.

தற்போதுள்ள எம். பி. ஒருவருக்கு மாத அலவன்ஸாக ரூபா 600-ம், மேலும் ரூபா 100-ம், வெளியிடத்திலுள்ளவர்களுக்கு அதிக அலவன்ஸாக ரூபா 75-ம் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர, எம். பி. க்கள் (உள்நாட்டில்) முதல் வகுப்பு வண்டியில் (ரயிலில்) பிரயாணம் செய்யவும், இலவச விமான சேவையும் வசதியளிக்கப்பட்டுள்ளது. இலவசமாக தபால் அனுப்பவும், இலவச டெலிபோன்கள் வைத்திருக்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

---

## மறைந்த சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன

திருக்கோணமலை, செவ்வாய்

கட்டைப் பறிச்சான் கிராமத்தில் காலஞ்சென்ற திரு. ம. செல்லப்பாக்கியம் என்பவர் வளவில் இருந்த அம்மன் பிள்ளையார் என்னும் இருபெரும் சிலைகள் சென்ற கிழமை திடீரென மாயமாய் மறைந்துவிட்டன. பின்னர் இருதினங்களுக்குப்பின் கட்டைப்பறிச்சான் அரசடி ஆலயத்தில் பிரஸ்தாப சிலைகள் இரண்டும் காணப்பட்டன.

பிரஸ்தாப ஆலய பூசாரி தனக்கு எவ்வாறு வந்தது என தெரியாது எனக் கூறினுர். இச் சிலைகள் தனித் தொருவரால் தூக்கமுடியாத பெரிய சிலைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## காட்டுக்குள் பிரேதம்

### அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

புத்தளம்—அனுராதபுரம் பிரதான வீதியில் 14-வது மைல் கல்லுக்கருகில், இம்மாதம் முதலாம் திகதியன்று கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சடலம், கட்டுப்பொத்த, பொல்பிட்டியாவைச் சேர்ந்த ஆர். மித்தபால என்பவருடையதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காட்டுக்குள்கிடந்த இப்பிரேதத்தை, இறந்தவரின் சகோதரரும், மைத்துணரும் அடையாளம் கண்டுபிடித்துள்ளனர்.

ஓனவெவ காட்டுக்குள், அதாவது பிரதான வீதியிலிருந்து முக்கால் மைல் தூரமுள்ள காட்டுக்குள், இறந்தவரின் சடம் இருந்ததை பாடசாலை மாணவன் ஒருவன் கடந்த வாரம் கண்டுபிடித்தான்.

கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் மித்தபால வாடகை கார்ச் சாரதியென்றும் மித்தபாலாவை யாரோ பொல்லால் அடித்துக் கொலைசெய்து பின்னர் காட்டுக்குள் வீசியிருக்கிருர்கள் என்றும் பொலிஸார் கருதுகின்றனர்.

மாஜிஸ்டிரேட் விசாரணை இன்று நடைபெற்றது

# புராதன விக்கிரகங்களை கொண்டுபோக விடோம்

## திருமலை இந்துக்கள் தீர்மானம்

திருக்கோணமலை, செவ்வாய் "திருக்கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் 400 ஆண்டுகளுக்குப் பிற்பாடு நடைபெறும் ஓர் அரிய நிகழ்ச்சியாகும். எங்கள் தலைமையிலேயே அது நடைபெறுவதும் அதை நாமெல்லோரும் கண்ணாரக் காண்பதும் நமது பெரும்பேறு என்றே சொல்லவேண்டும்" என்பதாக சர் கந்தையா வைத்தியநாதன் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியபோது குறிப்பிட்டார். திருக்கோணமலை கோணேஸ்வர ஆலய கும்பாபிஷேக இணைப்புக் குழுவினதும் புனருத்தாரண சபையினதும் ஆதரவில் பண்டிதர் திரு. ஐ. சரவணமுத்து தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

1944-ல் கோணேசர் கோட்டையில் கண்டெடுக்கப்பட்டு இதுவரை காலமும் திருமலைக் கச்சேரியில் வைக்கப்பட்டிருந்த விஷ்ணு இலக்குமி திருவுருவச் சிலைகளை அரசாங்கம் அனுராதபுரம் கொண்டு செல்லத் தீர்மானித்திருப்பதை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதாக ஒரு தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இரு விக்கிரகங்களையும் திருக்கோணமலை இந்து மக்களிடமே ஒப்படைக்கவேண்டுமென்று இத்தீர்மானம் கலாச்சார அமைச்சரை மேலும் கேட்டுக்கொள்ளுகிறது

---

## ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

கொழும்பு, புதன் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மகாசிவராத்திரி தினத்தன்று திருக்கேதீச்சர மடத்தில் காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை திருவாசக பாராயண தியானம் கூட்டு வழிபாடு நடத்தி இதன்மேல் திருக்கேதீஸ்வர கோவில் வழிபாட்டிலும் மற்றும் விசேட வைபவங்களிலும் கலந்து கொள்வார்கள். அடுத்த நாள் காலை திருவாசக மடத்தில் மகேசுர பூசையும் நடத்துவார்கள்.

---

## அபிஷேக ஆராதனை

மாவிட்டபுரம், செவ்வாய் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நேற்றையதினம் தமிழ்மொழிப் பாதுகாப்பினை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டன


வெள்ளி முதல் திரையிடப்படும்

கிங்ஸ்லி (கொழும்பு) • பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி
மற்றும் பலர் நடிக்கும்

**புனர்ஜென்மம்**

திரைக்கதை–வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிர

இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்பு)

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
மற்றும் பலர் நடித்த

**ராணி சம்யுக்தா**

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் | டைரக்ஷன் டி. யோகானந்த்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

**நாகநந்தினி**

மனோகரா (யாழ்ப்பாணம்)

எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என் ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்
மற்றும் பலர் நடித்த

**தேவகி**


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

## மகாசிவராத்திரி

திருக்கேதீச்சரம், புதன் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையார் இவ் வருடம் இம்மாதம் 22-ல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற வேண்டிய மகாசிவராத்திரி தின ஒழுங்குகளுக்கு தற்பொழுதிருந்தே வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துவருகின்றனர்.

இந்தியாவிலிருந்தும் இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் விழா வைபவத்தில் பங்குபற்றுபவர்களும் யாத்திரிகர்களுமாகப் பல ஆயிரக்கணக்கான அடியார்கள் வருவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

புகையிரதப்பகுதியார் விசேடப் புகையிரதப்போக்குவரத்துகளை ஒழுங்குசெய்திருக்கிறார்கள். பஸ் போக்குவரத்துப் பகுதியாரும் யாழ்ப்பாணம், வவுனியா முதலிய இடங்களுக்கூடாக நேரடியாக ஆலயத்திற்குப் போகவும் வரவும் அதிக வாகனங்களை ஒழுங்கு செய்திருப்பதுடன் பல ஊர்களிலிருந்தும் வவனியா, மன்னார் போன்ற புகையிரத நிலையங்களிலிருந்து யாத்திரிகர்கள் ஆலயத்திற்கு இரவும் பகலும் வந்துபோவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்துவருகிறார்கள். ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கும் சாப்பாடு தண்ணீர் வசதிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்று இரவு முழுவதும் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பல சங்கீத விற்பன்னர்களும் சொற்பொழிவாளர்களும் பங்குபற்ற இருக்கிறார்கள்.

விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலிமூலம் ஒலிபரப்புவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

---

## ஆலயபரிபாலன சபை ஸ்தாபிதம்

கோண்டாவில், செவ்வாய் கோண்டாவில் ஸ்ரீ நாராயணன் ஆலயம் சீராக பரிபாலனம் செய்யப்படுவதற்காக சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதற்கென ஒரு சபையை அமைப்பது ஏற்றதெனத் தெரிவிக்கப்பட்டகருத்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 பேரைக் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்திற்கு திரு. நாகனகையா தலைமைவகித்தார்.

---

## தைப்பூச விழா

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவாலயத்தில் தைப்பூச விழா நாளை பகல் விசேஷ அபிஷேக ஆராதனை, அன்னதானத்துடன் ஆரம்பமாகும். பிற்பகல் விசேஷ மேளக் கச்சேரியும் கதாப்பிரசங்கமும் நடைபெறும். திரு. மு. வர்ணகுலசிங்கம் 'திருநாளைப் போவார்' சரித்திரத்தைப் பக்கவாத்தியங்களுடன் சங்கீத கதாப்பிரசங்கமாக பிற்பகல் 7-30 மணிதொடக்கம் நிகழ்த்துவார். இவ்விழா சென்ற எட்டு ஆண்டுகளாக சமய கைங்கரியங்களில் ஈடுபட்டு பணியாற்றிவரும் யாழ்ப்பாணம் சி[illegible]ச்சாலை ஊழியர் சங்கத்தி[illegible] ஆதரவில் இவ்வாண்டு கொ[illegible]டாடப்படுகிறது.

---

## இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், புதன் நீர்வேலி கிராமச் சங்க 2-ம் வட்டாரத்திற்கு நடந்த உப தேர்தலில், திரு. கணபதிப் பிள்ளை நாகலிங்கத்திற்கு 142 வாக்குகளும், திரு. எஸ். பி. பாலரத்தினத்திற்கு 107 வாக்குகளும் கிடைத்தது. திரு. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 2-ம் வட்டார அங்கத்தவராக 53 அதிக வாக்குகளால் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

# "பொலிஸ் அதிபரிடம் புகார்செய்வோம்"

## கறுப்புக்கொடி அகற்றிய சம்பவம் பற்றி பட்டிருப்பு எம். பி.

யாழ்ப்பாணம், புதன் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணம் மாநகரசபைக் கட்டிடத்தின் மீது பறக்கவிடப்பட்டிருந்த கறுப்புக்கொடியை இரு பொலிஸ்காரர் அகற்றிச் சென்றது பற்றி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் புகார் செய்ய விருப்பதாக தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. எஸ். எம். ராசமாணிக்கம் தெரிவித்தார்.

மேயரின் உத்தரவின் மீது மாநகரசபைக் கட்டிடத்தின் மீது கட்டபபட்ட கொடியை பொலிசார் அகற்றிச் சென்றது ஆத்திரமூட்டும் செய்கை மட்டுமல்ல மாநகரசபைக் கட்டிட வளவுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த சட்டத்தை மீறிய செயலுமாகும் என்று திரு. இராசமாணிக்கம் கூறினர்.

இச்செயலைச் செய்தவர்கள் யார் என்பதைத் தாங்கள் தெரிந்து கொண்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவர்களை நீதி மன்றத்தில் நிறுத்துவது பற்றித் தாங்கள் ஆராயவிருப்பதாகவும் தமிழரசுக்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மாநகரசபைக் கட்டிடத்தின் மீது கட்டப்பட்டிருந்த கொடியை அகற்றியது அமைதியான மக்களுக்கு ஆத்திரமூட்டிக் குழப்பம் ஏற்படுத்தும் நோக்கமுடையதென்றும், இச் செய்கையினல் ஆத்திரமடைந்த மக்களை, மேயர் உடனடியாக வேறு கறுப்புக் கொடியைக் கட்டி தணித்துவிட்டது பாராட்டப்படவேண்டியதென்றும் திரு. ராசமாணிக்கம் கூறினர். ஆத்திரமூட்டும் செயல்களை அமைதியைப் பாதுகாக்க வேண்டியவர்களே செய்தபோதிலும் பொறுமையை இழக்காமல் அமைதியைக் கடைப்பிடித்த மக்கள் பாராட்டுக்குரியவர்களென்றும் திரு. ராசமாணிக்கம் கூறினர்.

## "பிரதமரின் விஜயம் பற்றி இப்போது விவாதம் கூடாது"

—மந்திரி சில்வா

கொழும்பு, செவ்வாய் வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமாக, முக்கியமாக பிரதமரின் புதுடில்லி, பீக்கிங் விஜயம் பற்றி விவாதிக்க வேண்டுமென்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு இன்றைய பார்லிமெண்டில் சபை முதல்வர் திரு. ஸி. பி. டி. சில்வா பதிலளிக்கையில், தாம் பிரதமருடன் இது பற்றி ஆலோசித்ததாகவும், பிரதமரும், மந்திரி சபையும் இப்போது அத்தகைய விவாதம் நடத்துவது உசிதமானதல்ல எனக் கருதுவதாயும் தெரிவித்தார். இந்தியாவும், சீனவும் கொழும்பு யோசனை பற்றி இன்னும் ஆலோசனையில் இருப்பதால் அத்தகைய விவாதம் இப்போது உசிதமானதல்ல என திரு. ராஜரத்னவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேலும் இவர் குறிப்பிட்டார்.

---

## ராதாகிருஷ்ணனின் அரசியல் மேதை

கல்கத்தா, பெப். 5 கம்போடிய மன்னர் நாரோடம் சிகோனுக், இன்று கல்கத்தா வந்து சேர்ந்தார், ஜனதிபதி ராதா கிருஷ்ணனின் அறிவுத்திறனையும், அரசியல் மேதையையும் இளவரசர் புகழ்ந்துரைத்தார். திரு. நேரு கம்போடிய மக்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய நண்பராகக் கருதப்படுகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

முன்னாள் கோப்பாயிலும் இப்போது கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் கடமையாற்றும் பண்டிதர் இராசையாவினதும் அனுராதபுரம் கச்சேரி லிகிதர் நடராசாவினதும் தந்தையார் நல்லூர் சடையர் சுப்பிரமணியம் காலமானர். புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஈமக் கிரியைகள் நடைபெறும்

பண்டிதர் இராசையா.
நல்லூர்.

## பிணையில் விட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புக்கொண்டது.

**பிணை அனுமதிப்பு தீர்வுகாணது**

எதிரிகளுக்கு எதிராகச் சாட்டப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பாரதூரமானவையென்று நீதிமன்றம் தெரிவித்தது. அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எதிரிகள் முயற்சித்தார்கள் என்பற்கு அத்தாட்சி எதுவுமில்லை என்று அவர்கள் வாதாடினலும், அரசாங்கத்தின் சார்பில் அட்டோர்ணி ஜெனரல் சமர்ப்பித்த வாதங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்கமுடியாதென்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர். ஒரு பிரஜையினுடைய உரிமைகளை பாதுகாப்பதற்கு கோர்ட் ஒருபொழுதும் தவறமாட்டாதென்றும் இபபொழுதுள்ள நிலையில் பிணையில் விடுதலை செய்வதற்கு அனுமதிப்பதால் தீர்வு எதுவும் காணமுடியாதென்றும் கோர்ட்டார் தெரிவித்தனர்.

---

## நரசிம்மன் தென்கிழக்கு விஜயம்

கோலாலம்பூர், பெப். 5 ஐ. நா. பிரதம உதவி தலைமைக் காரியதரிசி திரு. நரசிம்மன் இன்று மலாயாவில் மலேஸியா சம்பந்தமாக பேச்சு நிகழ்த்திவிட்டு சிங்கப்பூர் புறப்பட்டார். சிங்கப்பூரிலிருந்து அவர் இந்தோனிஷியா செல்வார். உத்தேச மலேஸிய சம்மேளனம் பற்றி ஆராயும்பொருட்டு தாம் தலைமைக்காரியதரிசி யுதாண்டின் கோரிக்கையின்பேரில் வந்திருப்பதாய் அவர் கூறினர். மேற்கு இரியன் சென்று, இந்தோனிஷியாவுடன் மேற்கு இரியன் இணையும் விஷயத்தில் தாம் உதவிசெய்யப் போவதாயும், மலேஸியா பற்றி இந்தோனிஷியா என்ன கருத்து கொண்டிருக்கிறது என அறியத்தாம் அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்தப்போவதாயும் அவர் கூறினர்.

---

## காங்கோ இந்திய துருப்புக்கள்

புதுடில்லி, பெப். 5 காங்கோவிலுள்ள இந்தியத் துருப்புக்கள் இரண்டு பிரிவுகளாகத் திருப்பி அழைக்கப்படும் என்றும் மார்ச் மாதத்தில் ஒரு பிரிவும், ஏப்ரல், மே மாதங்களில் மற்ற பிரிவும் திரும்பும் என்றும் அறிவிக்கப்படுகிறது.